371

உ

மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 2.] 1923ஞ செப்டம்பர்மீ 1உ [பகுதி 8.

இதில் வெளிவரும் "பவளத்தீவு" அல்லது
"குடும்பசாபம்" என்னும் நாவல்

ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

15 OCT 1923

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1923

ரிஜிஸ்டர்ட்] [காபிரைட்.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றனர்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தர வேண்டியதா யிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று இதனை 1922ஞு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் முதலில் வெளியாகி முடிந்தது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரை தான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923ஞு மார்ச்சுமீ 1உ முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவழத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதிசயமான நாவல் தொடங்கி, வெளியாகிவருகிறது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணுவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்கும் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலையம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

15 OCT 1923

கூறுகிறேன். நீ சந்தேகித்தபடி அந்த வாலிப வீரன் நமது வில்வநாதனே." என்றான்.

அப்பெயரைக்கேட்டதே பத்மநாயகி "ஆ. போதும் போதும், அதைப்பற்றிப் பேசவேண்டா மென்று முன்னமே உம்மை வேண்டிக்கொண் டிருக்கிறேன். நீரும் அப்படியே வாக்களித் திருக்கிறீர்" என்றாள்.

டாக்டர்:—"ஆம். அது உண்மைதான். ஆயினும் நான் எனக்குத்தெரிந்த இரகசியத்தை யுன்னிடம் கூறு விட்டால் உனக்கு மனத்தாப முண்டாகிறதல்லவா! அன்று அவன் முதல் முதல் இராகவனோடு அரண் மனைக்கு வந்தபோது அவனைக்கண்டதே யுனக்குண் டான மனக்குழப்பத்தால் நீயவனை முன்னே கண் டிருக்கிறாயென் றுணர்ந்து கொண்டேன். உன்னைக் கேட்டபோது நீ சரியானபதில் கூறாமல் அதைப் பற்றிப் பேசாம லிருக்கும்படி கோரிக்கொண்டாய். ஆகையால் வில்வநாதனையே கேட்டறிவதென்று தீர் மானித்துக் கொண்டேன். அவன் அன்று மாயசிங் கன் கூடச்சென்றவன் சண்டைகழித்த பின்பே வந் தான். அவனைக் கேட்டதற்கு அவனும் 'அதைப்பற் றித் தயவுசெய்து என்னை வற்புறுத்திக் கேட்கா திருக்கப் பிரார்த்திக்கிறேன்" என்றான். அதற்கு மேல் யோசித்துப் பார்த்தேன். சரி நீயவனை வழி யிலோ எங்கேயாகிலும் கண்டு அவனை யிரகசியமாகவும் தந் திரமாகவும் உன் அறைக்கு அழைப்பித் திருக்க வேண்டும். அங்கு நீயவனிடம் உன் காதலை வெளி யிட்டிருக்க வேண்டும். அவனுக்கு அத்தகைய விஷ யங்கள் அடியோடு புதிதாகையால் உன் பிரியத் திற்கு இணங்கி யிருக்கமாட்டான். இடையில் நீயெப்

186493

படியோ அவன் கணுக்கையி லிருக்கும் அந்த மரு வைப்பார்த்து விட்டாய்'' என்றதே,

பத்மநாயகி முகம் வெளுத்து மிக்க விகாரமடைந்து "போதும் போதும் அச்சண்டாளப்பயல் யாவும் பிதற்றி விட்டான்'' என்றாள். அச்சமயம் அவள் முகத்தில் ஒரு பயங்கரத் தோற்றம் உண்டாயிற்று. கண்களில் கோபத்தனல் வீசியது.

டாக்டர்:—"சே! கடவுளறிய அவன் ஒன்றும் கூற வில்லை. நான் முதலில் கேட்டபோது நீ ஏதேனும் கட்டுக் கதை கூறி விட்டிருந்தால் நான் கட்டாயம் நம்பிக்கொண்டே யிருப்பேன். நீ மறைத்தாய். அவனைக் கேட்டதற்கு அவனும் அதைப்பற்றி கேட்க வேண்டா மென்றான். இந்த இரகசியம் எனக்கு தெரியாம லிருப்பதெனின் என் மனதிற்கே அது அவமான மாகத் தோன்றியது. அதன் மேல் சிந்தித்தேன். அவனுடைய பெருந்தன்மை யான குணம் எனக்குத் தெரியும். ஆகையால் இதை வெளியிட்டால் ஒரு ஸ்திரீயின் மானம் கெட் டுப்போ மென்றே அப்படிச் செய்தானென்று அறிந்து கொண்டேன். அதற்கு மேல் சிந்திக்கச் சிந்திக்க உலக அனுபவம் தெரிந்த என் அறிவிற்கு விஷயம் இப்படித்தான் நடந்திருக்க வேண்டும் என்று புலப்பட்டது. இப்போது உன் வார்த்தை களாலேயே அது மெய்யேயென்று விளங்கி விட் டது. ஆயினும் இதை யித்தோடு மறந்து விடுகி றேன். ஒன்று மட்டும் கூறுகிறேன். நாம் இருபது வருடங்களுக்கு முன்பிருந்து சிநேகிதராக இருந்து வருகிறோம். என் காதலராக விருக்கிறோம். நான் உன்னைத் துரோகம் செய்ததேயில்லை. நீ

மட்டும் என்னைத் துரோகம் செய்தாயோ அந்த நிமிடமே யுன் ஆயுள் முடிந்ததென்று நம்பிக்கொள். இரசாயன சாத்திரத்தின் மர்மங்களில் நானறிந்து கொள்ளாதது எதுவுமே கிடையாதென்று உனக்குத் தெரியும். இதோ இருக்கிறதே இரோஜா செடி இப்போது எப்படி யிருக்கிறது? நான் விரும்பினால் இன்னும் ஒரு நாழிகைக்குள் அதன் இலைகளும் மலர்களும் வாடி யுலர்ந்து உதிர்ந்து அதன் வேர் அழுகி அது மடிந்து போம்படி செய்து விடுவேன்.'' என்று கூறி விட்டு "வா, இனி நாம் இவையாவும் மறந்து அரண்மனைக்குச் செல்வோம்'' என்று அவளை யழைத்துக் கொண்டு சென்றான்.

38-வது அத்தியாயம்.

பத்மநாயகியின் பாதகச்சிந்தனை—பத்மநாயகியும் புண்ணிய கோடிப்பிரபுவும்—பத்மநாயகியின் மகா அக்கிரமமான சூழ்ச்சி—துஷ்டகேது இராஜகுமாரனுக்கு வந்த அநாமதேயக்கடிதம்—நிரபராதிமேல் அபாண்டப்பழி—வில்வநாதன் பிராணபத்தில் சிக்கிக்கொள்ளல்—ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு.

அன்று இரவு பத்மநாயகிக்குச் சற்றேனும் நித்திரை பிடிக்கவில்லை. அவள் மனதில் ஆயிரம் தேள்கள் கொட்டிக்கொண் டிருப்பதுபோ லிருந்தது. அவள் மனதில் வெறுப்பும் கோபமும் வஞ்சமும், பீதியும், கலக்கமும் குடிகொண் டிருந்தன. நிரபராதியும் களங்கமற்ற மனதை யுடையவனு மாகிய வில்வநாதன்மேல் தான்

கொண்டகாதல் எண்ணம் நிறைவேறாது போனது முதல் இவளுக்கு அவன்மேல் மிக்க வெறுப்பே யுண்டாய்விட்டது. இப்போது அவனுக்கும் தனக்கும் நடந்த அவமானமாகிய இரகசிய விஷயம் அவனால் வெளியாய்விட்டதென்ற எண்ணத்தால் அவன்மே லிருந்த வெறுப்போடு கோபமும் அதிகமாக உண்டாயிற்று. டாக்டர் அந்த இரகசியத்தைத் தானே யூகித் தறிந்ததாகக் கூறியதையும் அவ்வாலிபன் கூறவில்லை யென்று உறுதியாகக் கூறியதையும் அவள் எள்ளளவேனும் மெய்யென்று நம்பவேயில்லை. டாக்டர் வற்புறுத்திக் கேட்டபோது அவன் நடந்தயாவும் கூறிவிட்டான் என்றே யவள் நிச்சயித்துக் கொண்டாள். ஆகையால் அவன் உயிரோடிருக்குமட்டும் தன் இரகசியம் வெளிவராதென்று நம்ப இடமில்லை என்றும் இன்னும் பலருக்கும் இதைக் கூறிவிடுவானென்றும் பீதிகொண்டாள். இதனால், எப்படியேனும் இவனையொழித்துவிட வேண்டுமென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

ஆனால் எப்படி அந்த எண்ணத்தை நிறைவேற்றுவது? தான் அதில் பிரவேசித்ததாக, அல்லது அவனுக்குத் தீங்குசெய்யக் கருதியதாக டாக்டருக்கு எள்ளளவு சந்தேகம் நேரினும் அந்த விநாடியே தன் பிராணன் போய்விடுவது நிச்சயம் என்று அவள் அறிவாள். ஆகையால் அன்னியரால்தான் அது நடைபெறும்படிச் செய்ய வேண்டும். இதற்காக நெடுநேரம் தனக்கு அறிமுகமானவர்களைப்பற்றி யெல்லாம் சிந்தித்தாள். புண்ணியகோடிப் பிரபுவுக்கு வில்வநாதன்மேல் பொறாமையும் கோபமுமுண்டாயிருக்கக் காரணங்க ளிருக்கின்றன வென்பதையவளறிவாள். எப்படியெனில்,

இராணி வில்வநாதனைக் கண்டது முதல் அவன்

அழகைப்பற்றி பன்முறை சிலாகித்துப் பேசியது புண்ணியகோடிப் பிரபுவுக்குத் தெரியும். இப்பிரபு இராகவன் போய்விட்டபின் இராணியின் காதலைப் பெற்ருன். பிறகும் இராணி வில்வநாதனை வீதியில் காணும்போது அன் பார்ந்த பார்வையாய்ப் பார்ப்பதையும், அவன் அழகைப் புகழ்வதையும் காணும்போது பிரபுவின்முகத்தில் கோபத் தணல் வீசுவதைப் பத்மநாயகி கண்டிருக்கிருள். இப்போது தன்னை யுத்தத்தில் வென்று தான் அவமானமடையச் செய்தது அந்த வாலிபனே யென்று பிரபு அறிந்தால் அவனுக்கு அவ்வாலிபன்மேல் வஞ்சந்தீர்த்துக்கொள்ள வேண்டு மென்கிற எண்ண முண்டாகுமல்லவா.

இதோடு வில்வநாதன் துஷ்டகேதுவின் தாயாரிடம் அடிக்கடி செல்வதும் அவளுடைய காரியஸ்தனுகவிருந்து இரகசியமாகவே அதிக பொருளைத் தான தருமங்களில் செலவிடுவதும் துஷ்டகேதுவின் தாயாராகிய அவ்வுத்தமச் சீமாட்டி வில்வநாதன் மேல் மிக்க அன்பார்ந்த புத்திரவாஞ்சை வைத்திருப்பதும் ஆகிய இவையாவும் டாக்டர் மூலமாய் அறிந்துகொண் டிருக்கிருள். ஆகையால் இரவுமுழுமையும் இவையாவும் கருதிக்கருதி தன் நஞ்சு போன்ற துஷ்டமனதில் ஒருவிதமான தீர்மானத்தை யுத்தேசித்துக் கொண்டாள்.

மறுநாள் காலையில் எழுந்திருக்கும் போது பத்மநாயகி சந்தோஷத்தோடேயே எழுந்து தேகசுத்திசெய்து அழகிய உடைகளை யணிந்து காலையாகாரம் உட்கொண்டதும் தன் அறையினின்று வெளிப்பட்டுப் புண்ணியகோடிப் பிரபுவின் அறையை நோக்கிச்சென்ருள். அச்சமயம் அப்பிரபு சோர்வடைந்த முகத்தோடு தன் அறையின் எதிரிலுள்ள தாழ்வாரத்தில் மெதுவா யுலவிக்கொண்

டிருப்பதைக்கண்டு அன்பார்ந்த வதனத்தோடு, பிரபுவே தயவுசெய்து சற்று என் அறைக்கு வரலாகுமோ வென்றாள். புண்ணியகோடிப் பிரபு சற்று வியப்போடும் கொஞ்சம் சந்தோஷத்தோடும் அப்படியே என்று கூறிக் கொண்டே அவள் பின்னால் சென்றான்.

பத்மநாயகியும் புண்ணியகோடிப்பிரபும் அறையில் உட்கார்ந்ததும் பிரபு அம்மாதை நோக்கி "என்ன சீமாட்டி? தாங்கள் மர்மமாக அழைத்ததை நோக்க ஏதேனும் இராஜாங்க இரகசியம் உண்டோவெனக் கருதுகிறேன்" என்றான்.

பத்மநாயகி:—"உமது சொந்த விஷயத்தைப் பற்றிப் பேசவே அழைத்தேன். ஏனெனில் நீர் மனோவியாகூலத்தோ டிருப்பதாக எனக்குப் புலப்படுகிறது. நாமனைவரும் ஒரேகருத்தோடு வேலைசெய்பவர்கள். நமக்குள் ஒற்றுமையும் அன்பும் இருந்தால்தான் யாவரும் க்ஷேமமாக விருப்போம். ஆகையால் உமது வியாகூலத்தை யொழிக்க முயலவேண்டியது எனது கடமையாக விருக்கிறது" என்றாள்.

புண்ணியகோடிப்பிரபு:—"ஆ! தாங்கள் இவ்வளவு இரக்கமும் அன்பும் என்விஷயத்தில் காட்டுவதற்காக நான் மிக்க சந்தோஷ மடைகிறேன். இதோடு இதனால் நான் தங்கள் புத்திரன் இராகவனுக்குப் பதிலாக இராணியின் காதலைப் பெற்றிருப்பதற்காகத் தாங்கள் என்மேல் கோபங்கொண்டிருக்கவில்லை யென்று தெரிகிறது." என்றான்.

பத்மநாயகி:—நான் அப்படி அற்ப யோசனைகள் செய்கிறவளல்ல. நீ இராணியின் காதலைப்பெற்றது முதல் நானும் டாக்டரும் கூறும் ஆலோசனைகளுக்கு விரோதமாக நீ நடந்துகொள்வதில்லை. அப்படி

யிருக்க நான் உன் விஷயத்தில் விரோதம் கொண் டிருப்பது நியாயமாகுமா! சேசே! பிரபுவே உன் மனதில் இருக்கும் வியாகூலம் இன்னதென்று தெரி வித்தால் அதை யெவ்வாறு நீக்குவதென்பதைப் பற்றி நான் என்னால் கூடியமுயற்சிசெய்ய ஆயத்த மாக விருக்கிறேன்.

புண்ணியகோடிப் பிரபு:- "ஸீமாட்டியே! என் நிலைமையில் எனக்குச் சற்றேனும் நிம்மதியில்லை. அதை யென் மனதினின்றும் கொட்டி விட்டால் எனக்குச் சற்று ஆறுதலாக விருக்கும். துஷ்டகேதுவின் கட்சி தினே தினே அதிகரித்துக் கொண்டே யிருக்கிற தென்பது நீ யறிந்தவிஷயமே. இராணியின்மேல் குற்றஞ்சாட்டித் தோல்வியடைந்த இரண்டு பேரை யும் விசாரணைக்குக் கொண்டுவர வேண்டுமென்று செய்த ஏற்பாட்டை டாக்டர் தங்கவேலுப் பிள் ளையே வேண்டா மென்று நிறுத்திவைத் திருக்கிரு ரல்லவா ?" என்றான்.

பத்மநாயகி:—இவையாவும் எனக்குத் தெரியும். ஆனல் நமது கட்சியே அதிக பலமானதென்று நான் நம் பிக்கையாய்க் கூறுகிறேன். துஷ்டகேதுவின் அகங் காரத்தை நாம் அடக்கிவிட வேண்டும்.

புண்ணியகோடி:—நான் இராணியின் காதலைப்பெற்றிருப் பதால் என்மேல் அவன் மிக்க பொறாமைகொண்டு சமயம் நேர்ந்தால் என்மேல் வஞ்சம் தீர்த்துக்கொ ள்ள ஆவலுடையவன யிருக்கிறான். அதோடு சந் தர்ப்பம் நேரும்போ தெல்லாம் என்னைப்பற்றி தூஷிப்பதும் நான் அன்று அடைந்த அபஜெயத் தைப்பற்றி மிக்க இழிவாய்ப் பேசுவதுமாக விருக்

கிருன். இதற்காகவும் என்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ள ஆவலுடையவஞக விருக்கிருன்.

பத்மநாயகி:—ஆம் அவன் அப்படிப்பட்டவ னென்றே கேள்விப்படுகிறேன். இன்னுமென்ன ?

புண்ணியகோடி:—பிரபுக்களில் பலரும் இருகட்சிகளுக்கும் பொதுவான ஆசாமிகளும், வீண்விரோதத்தை யொழிப்பதற்கும், நாட்டில் அராஜரீகம் ஏற்பட்டு பெருந்தீங்குகள் நேராது தடுப்பதற்கும், இராணி துஷ்டகேதுவை மணம்புரிந்து கொள்வது உத்தமம் என்று கூறுகிருர்கள். எந்நேரமும் பீதியாலும் மனவேதனையாலும் துன்பப்படுவதைக் காட்டிலும் நமக்கு விருப்பமின்றேனும் ஜனங்களின் க்ஷேமத்திற்காக அப்படியே செய்வோ மென்று இராணி கருதிவிடலாகும். இதனுல் என்மனம் எந்நேரமும் பெருங்குழப்பத்தி லிருக்கிறது.

பத்ம:—இந்த ஒருவிஷயந்தாஞ உனக்கு மனவேதனையை யுண்டாக்கி யிருப்பது ?

புண்ணியகோடி:—இல்லை யில்லை. அன்று இராகவனேடு கூட அரண்மனைக்கு வந்தானே பெண்முகமுடைய அந்த மெலிந்த தேகியான வாலிபப்பயல். அவன் பெயர் வில்வநாத னென்கிருர்களே—நமது டாக்டரின் வளர்ப்புப் புத்திரனும்.

பத்ம:—ஆம். ஆம். அவன் மன்மதன்போல் அழகுவாய்ந்தவன். அவனைப்பற்றி என்ன ?

புண்ணிய:—அவனைப்பற்றி என்னவா ? ஏன், நீ பார்க்கவில்லையோ. இராணி அவனை வீதியிலாவது எங்காவது கண்டால் அவள் முகத்திலுண்டாகிற சந்தோஷத்தின் பிரகாசத்தைக் கண்டாயல்லவா. அடிக்கடி

அவன் அழகைப்பற்றி புகழ்ந்து கூறுவதை நீ கவனிக்க வில்லையா?

பத்ம:—"அப்படியாயின் அன்று மூன்றாவது நாள் யுத்தத்திற்கு வந்து உன்னைவென்றது அவனே யென்று இராணிக்குத் தெரியாம லிருப்பது மிக்க நலமாயிற்று" என்றாள்.

இதைக் கேட்டதே அவன் மனதில் சுடர்விட்டெரியும் வேல்பாய்ந்ததுபோ லிருந்தது. அவன் அடக்கொணுக் கோபமும் வெறுப்பும் பொறுமையு மடைந்து "அடடா என்ன மூடனுகிவிட்டேன். அதே உயரம் மெலிந்ததேகம், சாயல், நடை, யாவும் அவனே என்பதை யறியாமலே அவனை மூடத்தனமாகச் சினேகனெனக் கூறி அவனோடு கை குலுக்கிவிட்டேன். நீ கூறுவது போல் இராணி யதையறியாதது நற்காலமே. அறிந்தால் என்ன நேரிடுமோ கூறமுடியாது." என்றான்.

பத்ம:—பிரபுவே! இவ்விஷயத்தில் அவனுக்காக மனக்கலக்கமடைவது தாங்கள் மட்டுமல்ல. ஏனெனில் அவன்மட்டும் இராணியின் காதலனுகி விட்டால் துஷ்டகேதுவின் கட்சியாருக்கு இராணியிடம் செல்வாக்குண்டாகும் வண்ணம் கட்டாயம் செய்துவிடுவான். அப்போது நமக்கெல்லாம் ஆபத்தே யென்பதில் சற்றும் சந்தேகமேயில்லை,

புண்ணிய:—அவன் டாக்டரின் வளர்ப்புப்பிள்ளை யல்லவோ! அப்படியிருக்க எப்படி எதிர்க்கட்சியில் கலந்திருக்கிறான்? டாக்டர் அப்படி இடங்கொடுப்பாரோ?

பத்ம:—டாக்டர் அவன்மேல் கண்மூடித் தன்மான விசுவாசம் வைத்துவிட் டிருக்கிறார். அவர் எவ்வளவு புத்திமதி கூறினும் அவன் அவற்றைக் கவனிப்பதே

யில்லை. இன்றேல் இராணியின் வீரன்மேல் யுத்தம் செய்யவருவானு.

புண்ணி:—எப்படியாயினும் அவனை யொழித்து விட வேண்டும். டாக்டருக்கு இராணி யவன்மேல் அன்பு கொண்டிருக்கும் சங்கதிதெரிந்தால் அதற்கு உடந் தையாயிருந்து அவள் எண்ணத்தை யீடேற்றக் கருதுவா ரென்று கருதுகிருயா?

பத்ம:—ஆ! ஒன்றுமட்டும் நன்ருய்க் கவனமிருக்கட்டும்; அந்த வாலிபனுக்கு யாரேனும் இடையூறு செய்யக் கருதுவதாய் மட்டும் டாக்டருக்குக் கொஞ்சம் ஐயம் உண்டாயினும் அவர்கள்மேல் பயங்கரமான வஞ்சம் தீர்த்துக்கொள்வார் என்பது நிச்சயம். என் பிராணன் கூடத்தக்காது.

புண்ணிய:—அப்படியாயின் அவன் விரோதிகளைக் கண் டிப்பது போலவே அவன் நோக்கங்கள் கைகூடவும் உதவிசெய்வார். இதுதானே உன்கருத்து?

பத்ம.—ஆம் ஆம் தடையேயில்லை. அவன்மேல் அவர் உண்மையான அன்பு பூரணமாய் வைத்துவிட் டிருக் கிருர். அதனுல்தான் அவன் துஷ்டகேது கட்சி யில் சேர்ந்திருப்பதற்குக் காரணமான கட்டை யுடைக்க அவர் மனங்கொள்ளா திருக்கிருர் என்று நான் நன்குணர்ந்து கொண்டேன்.

புண்ணிய:—ஆ! அவனுக்கு துஷ்டகேது கட்சியில் உண்டாயிருக்கும் சம்பந்தம் அத்தகைய உறுதி யுடையதா? அது எத்தன்மையது?

பத்ம:—"இப்போது நான் கூறுவதை மிக்க இரகசியமாய் மனதில் வைத்து நடக்கவேண்டும். உண்மை யென்னவெனில் வில்வநாதன் துஷ்டகேதுவின்

தாயாருடைய கள்ளக்காதலன்'' என்று மிக்க இரகசியமாய்க் கூறினள்.

புண்ணிய:—என்ன? அச்சீமாட்டி ஈசுரபக்தி யுள்ளவளென்றும் எந்நேரமும் தானதருமம் செய்கிறவளென்றும் எத்தகைய விருந்து கேளிக்கை கொண்டாட்டங்களுக்கும் செல்கிறதில்லையென்றும் யாவரும் கூறுகின்றார்களே!

பத்ம:—''அய்யோ! வெளிக்கு அவ்வாறு வேடம்போட்டுக்கொண்டால்தான் இவ்விதமாய் நடப்பது வெளியில் வராது. செல்வம் பொருந்திய அழகுவாய்ந்த சீமாட்டிகளில் யார்தான் பிரியப்பட்ட போகங்களையனுபவிக்காம லிருக்கிறார்கள். இது டாக்டர் மூலமாய் நான் தெரிந்துகொண்டபடியால் உனக்குக் கூறினேன். இது உண்மையான இரகசியம். அடிக்கடி அவ்வாலிபன் அவர்கள் வீட்டிற்குச்செல்கிறான்.'' என்றாள்.

நேயர்களே! கொஞ்சமேனும் சத்தியத்தையாவது நீதியையாவது கவனியாமல் களங்கமற்ற உள்ளமுடைய நிரபராதியாகிய அவ்வாலிபனை யழிக்கத் துணிந்த இப்பரம சண்டாளி கூறிய மொழிகளைக் கேட்டதே, இவள் போன்றவர்களுடைய சகவாசத்தாலேயே தன் நற்குணங்களை மறந்தொழுகும் புண்ணியகோடி உடனே ஒருவிதச் சந்தோஷமடைந்து,

''ஆ! சீமாட்டியே நீ யிவ்வளவு சங்கதிகளைக் கூறிய தற்காக மிக்க நன்றியுடையவனாக விருப்பேன். இப்போது ஒரே கல்லால் இரண்டு பேரையும் ஒழித்துவிடுவேன். இச்சங்கதி நம்மிருவருக்குள்ளேயே யிருக்க வேண்டும்'' என்றான்.

பத்ம:—பத்திரம் பத்திரம், கொஞ்சம் வெளிவந்ததோ நம்முயிர் அப்போதே போய்விடும்.

புண்ணிய:—"அப்படி அஞ்சவேண்டிய காரணமேயில்லை. மிக்க சுலபமான வேலை. துஷ்டகேதுவுக்கு ஒரேயொரு கையொப்பமிடாத கடிதம்" என்றதே,

பத்மநாயகி உள்ளத்தில் மிக்க சந்தோஷமடைந்து "சரிசரி. தெரிந்துகொண்டேன், போதும். இனி நாம் பிரிந்துவிடுவோம்" என்றாள். மறுநிமிடம் புண்ணியகோடி தன் அறைக்குச் சென்றான்.

* * * * *

அதேதினம் மாலை சுமார் ஆறுமணிக்குமேல் துஷ்டகேது தன் அறையில் உட்கார்ந்துகொண்டு ஏதோ சில பத்திரங்களைப் பார்த்துக்கொண்டேயிருக்கையில் ஒரு வேலைக்காரன் வந்து ஒரு கடிதத்தை யவனிடமளித்தான். துஷ்டகேது இராஜகுமாரன் அதைப் பிரித்துப் பார்த்தான். அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது:—

"இக்கடிதத்தை யெழுதுவோன் துஷ்டகேது இராஜகுமாருடைய குடும்ப கௌரவத்தைச் சிலாக்கியமானதாகக் கருதும் ஓர் நண்பன். நான் இப்போது வெளியிடுவது ஒரு துயரமான பயங்கர இரகசியம். இந்த இரகசியத்தை யறிந்திருப்போர் யாரென்று தெரிந்தால் அவர்கள் உயிருக்கே கட்டாயம் ஆபத்து நேரிடும். ஆகையால் நான் இதில் என் பெயரை வெளியிடவில்லை. இராஜகுமாரரே! இதை வாசிக்கும்போது உமது மனதைத் தைரியப்படுத்தி அடக்கிக்கொண்டு பொறுமையாகவிரும். ஆத்திரப்படவேண்டாம். உரோஷமுள்ள சுத்தவீரரே! உமது தாயார் தர்மம் செய்கிறதாக அபிநயித்துக்கொண்டு அகௌரவமான காரியங்களைச் செய்கிறார்கள். உமது வீட்டிற்கு உமது தாயினிடம் தருமம் செய்யும் காரியஸ்தன்

என்று வந்துகொண்டிருக்கும் அழகிய வாலிபனான வில்வ நாதனென்பவனே உமது தாயாரின் கள்ளக்காதலன். நேரில் கேட்டால் உமது தாயார் ஏதேனும் சாக்குப் போக்கு கூறிவிடுவார்கள். உமது கண்ணால் கண்டே திருப்தியடையும். அந்த வலிபன் அடிக்கடி உமது தாயி டம் வந்துகொண்டிருக்கிறான். அவ்வளவே'' என்று எழுதி யிருந்தது.

இதை வாசித்ததும் துஷ்டகேதுவின் மனதில் உண் டான கோபம், துயரம், ஆத்திரம், இவைகளை யிவ்வா றென்று கூற முடியாது. பூர்வீக முதல் தன் குடும்பத்திற் கிருந்த கௌரவமே யடியோடழிந்துவிட்ட தென்று அவன் மனம் சொல்லொணா வேதனையடைந்தது. வில்வ நாதன் கள்ளர் குகையில் இவனைச் செயித்து இவனுக்கு அவமானத்தை யுண்டாக்கி யிருக்கிறான். பிறகு இவன் குசலாம்பாள்மேல் காதல்கொண்டு அவளைச் சிறை வைத் திருந்தபோது அவன் போட்டியாக வந்து இரண்டாம் முறை இவனை வீழ்த்திவிட்டு அப்பெண்ணை மீட்டுக் கொண்டு போய்விட்டான். இவ்வாற்றால் வில்வநாதன் மேல் இவனுக்கு அடங்காவஞ்சம் இருந்ததாலேயே மேல்கண்ட கடிதத்தைப் பார்த்ததும் அதிற்கண்ட சங் கதி யுண்மையேயென்று தீர்மானித்துக்கொண்டான். உடனே வில்வநாதன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதே இப்போது அவன் மனதில் மிக்க ஆத் திரமாக விருந்தது.

துஷ்டகேது தன் மன உணர்ச்சிகளியாவும் அடக் கிக்கொண்டு உடனே வாயில்காப்போனை யழைத்து "நமது அரண்மனைக்குவரும் வில்வநாதன் என்ற வாலி பனை நீ யறிவாயா?'' என்றான்.

காவலன்:—" ஆ ! அவரா தெரியும். மிக்க நல்லவாலிபர்.

வரும்போ தெல்லாம் என்குழந்தைகளுக்கு ஏதா வது தின்பண்டம் கொண்டு.——" என்பதற்குள் துஷ்டகேது மிக்க கோபத்தோடு "சட்! அந்தக் கதையை யெல்லாம் நான் கேட்கவில்லை. வருகிறானா இல்லையா இரண்டி லொன்றுசொல்" என்றான்.

காவலன் நடுங்கிப்போய் "இரண்டு மூன்றுமாத கால மாக அவர் வருவதை நான் பார்க்கவில்லை. மதில் சுவரி லுள்ள இரகசியவழியாய் வந்து நேராய்ச் சிமாட்டியி னறையை நோக்கிச் செல்வதை இரண்டொரு முறை கண்டதாகத் தோட்டக்காரமுனியன் கூறினான்" என்றான்.

துஷ்டகேது "சரி, போதும் பத்திரம். இதைப்பற்றி பிரசங்கம் செய்தாயோ கொடிய தண்டனைக்குள்ளாவாய். போய் தோட்டக்காரனை யிங்கனுப்பு" என்றான்.

காவலாள் மிக்கபயமடைந்து "மகாராஜா! நான் வாய்திறந்து இதைப்பற்றி பிரஸ்தாபம் செய்யவேமாட் டேன்" என்றுகூறிச் சென்றான்.

இரண்டொரு நிமிடங்களில் தோட்டக்கார முனி யன் துஷ்டகேதுவின் முன்வந்து நின்றான். முனியன் அஞ்சாத கண்டிதவாதி. ஆகையால் துஷ்டகேது வில்வ நாதன் என்றவனை நீ யெப்போது கடைசியாகக் கண் டாய் என்றதே "மாலைப்போதுதான் ஒரு மணிநேரத் திற்கு முன்பு கண்டேன்" என்றான்.

துஷ்ட:—"இப்போது அவன் அரண்மனைக்குள் இருக் கிறானா?" என்றான்.

முனியன் "பெரும்பாலும் இருக்கவேண்டும். ஏனெ னில் அவர் மதில்சுவரிலுள்ள சிறுவழியாய் வந்து சிமாட் டியினறைக்குச் சென்றதைக் கண்டேனேயன்றி திரும்பி வந்ததைக் காணவில்லை" என்றான்.

துஷ்டகேது:—"சரி, போதும் நீபோய் மாரியையும் கேசவனையும் இங்கு உடனேயனுப்பு" என்றான்.

முனியன் என்னமோ விபரீதம் நடக்கப் போகிறது போல் காண்கிறது என்று மனதில் சிந்தித்துக்கொண்டே சென்றான். இரண்டொரு நிமிடங்களுக்குள் துஷ்டகேது துரிதமாய் அவர்களிருவர்க்கும் இரண்டொரு கட்டளையிட்டு அவர்களை யனுப்பிவிட்டுத் தான் தோட்டத்திற்குள் சென்றான். அவன் அங்கிருந்து கட்டிடத்தின் பின்பக்கம் சென்று இரகசிய வழியாக ஓர் நீண்ட இருண்ட வழியே அரண்மனையின் வேறொரு பாகத்திற்குச் சென்று அவ்வழியில் சந்தடி செய்யாமல் தடவிக்கொண்டே போனான். அவன் செல்லுமிடத்திற்கும் பக்கத்திலுள்ள அறைகளுக்கும் இடையில் மெல்லிய பலகைச் சுவரே யிருக்கிறது. அந்த அறைகள்தான் அவன் தாயார் இருக்கும் அறைகள். அவற்றில் ஒரு அறையில் இருவர் பேசும் சத்தம்கேட்டு அங்கு நின்று ஒத்துக்கேட்டான். அச்சமயம் வில்வநாதன் கீழ்க்கண்டவாறு கூறுவது அவன் செவியில் வீழ்ந்தது.

"ஆம் தாங்கள் என் விஷயத்தில் காட்டிய அன்பே என் தீரா மனோவேதனைக்கு ஒரு அரிய மருந்தாக விருக்கிறது. நான் எப்படியோ என் துயரமிகுதியாலோ, ஆத்திரத்தாலோ என் உயிருக்குயிரான இரகசியங்களைத் தங்களிடம் கூறிவிட்டேன். அத்தகைய மனோவேதனைகளிருப்பினும் சந்தோஷமடைந்திருக்கத் தாங்கள் எனக்கொரு வழி காட்டினீர்கள். ஓ சீமாட்டியே! என் விஷயத்தில் தாங்கள் காட்டிய அன்பு......" என்ற இவ்வசனங்களைக் கேட்டதே துஷ்டகேது சகிக்க முடியாதவனாய், இன்னும் சற்றுநேரம் அவர்கள் சம்பாஷணையைக் கேட்டால் தனது கோபம் வெளியாய் விடுமென் றஞ்சி

அந்த விடத்தைவிட்டு வெறிபிடித்தவன்போல் ஓடித் தன்னிடமிருந்த சாவியால் ஒரு இரகசியக் கதவைத் திறந்துகொண்டு தோட்டத்திற்குள் நுழைந்து மரங்களடர்ந்த ஒருவிடத்திற்சென்று மெதுவாய் மாரி! கேசவா! என்றழைத்தான்.

ஆட்கள் இருவரும் "பிரபுவே இதோ விருக்கிறோம்" என்றார்கள். துஷ்டகேது அவர்களருகிற்சென்று மெதுவாய் "இருக்கிறான்—வருவான்—சாக்கிரதை — தவறிவிடப்போகிறீர்கள்" என்றான். அதன்பிறகு மூவரும் அங்கிருந்த செடிகளின் மத்தியில் மறைந்து நின்று மனிதன் வரும் சத்தம் கேட்கிறதாவென்று உன்னிப்பாகக் கவனித்துக்கொண் டிருந்தார்கள்.

துஷ்டகேது "சம்பாஷணையை முழுதும் கேட்டு எதையும் நிச்சயிப்போம்" என்ற சிந்தையின்றி "ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு" என்ற பழமொழியையும் மறந்து தீரா மனோவேதனைக்கு வழி தேடிக்கொண்டான்.

---

39 - வது அத்தியாயம்.

வில்வநாதன் பிராணாபத்து—அவன் மிக்க ஆச்சரியமான வழியாய்த் தப்பித்துக்கொள்ளல்—துஷ்டகேதுவின் மாபாதகம்—அவன் படும் நரகவேதனை.

இரவு நிலவு இருப்பினும் மேகத்தில் மறைந்திருந்தது. துஷ்டகேதுவும் அவன் ஆட்களும் எச்சரிக்கையாய் இக்கும்போது சுமார் கால்மணி நேரம்கழித்து ஆள் வரும் சந்தங்கேட்டது. உடனே மூவரும் ஒருவரையொருவர் ஜாடையாய்த் தொட்டுப் பார்த்துக்கொண்டார்

கள். அதற்குள் மதில் சுவரிலிருக்கும் கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது.

உடனே துஷ்டகேது மறைவிடத்திலிருந்து தலை நீட்டிப்பார்த்து, கதவைத்திறக்கிறவன் வில்வநாதன் என்றறிந்ததும் தன்வாளை யோங்கிக்கொண்டு பாய்ந்துபோய் "திருட்டுப்பயலே! இதோ துஷ்டகேதுவின் கையால் ஒழிந்துபோ" என்று தன் வாளால் வீசினான். வில்வநாதன் உடனே அவனுடைய எண்ணத்தை யறிந்து கொண்டான். அதாவது இவன் நம்மேல் விரோதம் கொண்டிருப்பதால் நம்மைக்கொல்ல நினைக்கிறான் என்று கருதி உடனே தன் குறுவாளை யுருவிக்கொண்டு துஷ்டகேதுவின் கத்திவீச்சைத் தட்டிவிட்டான். அவனுக்கு நற்காலமாய் அச்சமயம் மேகம் நீங்கி மதியம் பிரகாசித்தது. அதற்குள் துஷ்டகேதுவின் ஆட்கள் இருவரும் துரிதமாய் ஓடிவந்து தங்கள் எஜமானுக்குத் துணையாக வாலிபனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

வில்வநாதன் பார்த்தான் கொஞ்சம் நிதானித்தால் பிராணபத்தாய் முடியும்; ஆகையால் "கடவுளே! நீயே கதி" என்று மனதிற் சிந்தித்துக்கொண்டு முன்னே நிற்பவன் மேல் நொடியிற் பாய்ந்து அவனைக் கீழே தள்ளிவிட்டு வாயிற்படியை யொரு தாண்டிற் கடந்து அங்கிருந்து தன் பலம் முழுமையும் உபயோகித்து ஓட்டமாக ஓடினான். துஷ்டகேது "அடே அவன் தப்பிப்போக விடலாகாது" என்று கூவியசத்தம் வாலிபன் செவிகளிற்கேட்டது. அவன் ஒரு மூச்சாகச் சுமார் இருநூறு கஜம் ஓடியபின் மூச்சு வாங்குவதைச் சரிப்படுத்திக் கொள்ள நினைத்தான். ஆனால் இரண்டொரு விநாடிகளில் எதிரிகள் துரத்திவரும் சத்தங்கேட்டு மறுபடி ஓடினான்.

துஷ்டகேதுவும் அவன் ஆட்களும் "அடேநில்நில்"

என்று அதட்டிக்கொண்டே வேகமாய்த் துரத்திச் சென்ருர்கள். வாலிபன் சொல்லொணுத் திகிலடைந்து இரண்டு மூன்று இருண்ட சிறு சந்துகளில் நுழைந்து ஓடினுன். தன் பகைவர்கள் இன்னும் விட்டவர்களாகவில்லை. கடைசியில் ஒரு வீதியில் பிரவேசித்தபோது அவனுக்குச் சற்று சந்தோஷ முண்டாயிற்று. ஏனெனில் அவ்வீதியிலே தான் பூபாலன் வீடு இருக்கிறது. அங்கிருந்த சில வீடுகளிலிருந்து தீபவொளி வீதியில் வீசிக்கொண் டிருந்தது.

வில்வநாதன் துரிதமாய் அவ்வீட்டிற்குள் நுழைந்து கதவைமூடித் தாளிட்டுக் கொண்டான். ஆனல் பின்னல் துரத்தி வந்தவர்கள் அச்சமயந்தான் அவ்வீதியில் நுழைந்ததால் அவன் அவ்வீட்டிற்குள் சென்றதைப் பார்த்துவிட்டு "ஓகோ! இனியிவன் நம்மிடம் சிக்கிக்கொண்ட மாதிரியே" என்று சந்தோஷ மடைந்தார்கள்.

வில்வநாதன் கதவைமூடிய சத்தத்தைக் கேட்டதும் பூபாலன் கையில் தீபத்தோடு அவன் எதிரில் வந்தான். அதேசமயம் "கதவைத்திற! துஷ்டகேதுப் பிரபுவின் பெயரால் கதவைத்திற" என்று தட்டும் சத்தங்கேட்டது. பூபாலன் வில்வநாதன் முகத்தில் தோன்றிய கலவரமும் திகிலும் பொருந்திய விகாரத்தைக்கண்டு பிரமித்து நின்ருன். வில்வநாதன் உடனே "துஷ்டகேது— கொலைபாதகன், என்னைக் கொல்லத் துரத்திவருகிருர்கள். இங்கு அடைக்கலம் புகுந்தேன் என்னைக் காப்பாற்றுங்கள்" என்ருன். இதற்குள் பூபாலன் தந்தையாகிய மாதவனும் அங்குவந்து சங்கதி யறிந்துகொண்டு தன் புத்திரனை நோக்கி,

"எப்படி யேனும் இவ்வாலிபனைத் தப்பவைக்க வேண்டும். சீக்கிரம் - அத்துஷ்டர்கள் சிப்பாய்களையழை

த்துவந்து கதவை யுடைத்து உள்ளேவந்து விடுவார்கள்'' என்றான்.

பூபாலன் "தந்தையே! மாடிமேல் மச்சுவீடு எதிர் வாடைக்குப் பலகைபோட்டு......" என்றதே தந்தை "பேஷ் பேஷ் சீக்கிரம் அழைத்துப்போ'' என்று கூறி விட்டு வில்வநாதனை நோக்கி, "என்புத்திரன் பின்னால் போ. கடவுள் உன்னைக் காப்பாற்றி விடுவார்'' என்றான்.

இதற்குள் வெளியில் கதவைத் தடால்தடால் என்று மூன்றுபேரும் கத்திக் கைப்பிடியால் தட்டும் சத்தம் வீடதிர்ந்து விடுகிறது. பூபாலன் வாலிபனை யழைத்துக் கொண்டு மாடிமேலேறி அதன் மேலுள்ள மச்சுவீட்டின் தளத்தின்மேல் சென்றார்கள். அங்கு ஒருபுறம் பலபழைய சாமான்கள் போட்டு வைக்கப்பட்டிருந்த மேல் தளத்தி லிருந்து எதிர் வீட்டின்மேல் தளம் மிக்க சமீபத்திலேயே யிருக்கிறது. அவ்வீதி நெருக்கமானது. இருபக்கங் களின் மேல்கூரைகள் வீதியின் பக்கமாய் முன்னுக்கு வந் திருந்தன. இரண்டிற்கும் இடையிலுள்ள வீதியின் வெளி யிடம் சுமார் எட்டடிமுதல் பத்தடிக்குள் ளிருக்கும். பூபாலன் எதிர்வீட்டின் தளத்தை வில்வநாதனுக்குக் காட்டி "நண்பனே! இங்கிருந்து அதுவரையில் எட்டு மட்டும் ஒரு பலகைபோடுகிறேன். சற்று தைரியத்தோடு சென்றால் எதிர்வீட்டுத்தளத்திற்குப் போய்விடலாம்'' என்று கூறிவிட்டுப் பலகையைத் தேடினான். பலகை அகப்படவில்லை.

இதற்குள் துஷ்டகேது முதலியவர்கள் கதவை யுடைத்து விட்டார்கள் என்று பூபாலன் தெரிந்து கொண்டு மிக்க மனோவேதனைப் படுகிறான். எங்குதேடி னும் பலகையாவது ஒரு கயிறுவது அகப்பட வில்லை. கீழே அத்துஷ்டர்கள் மாதவனோடு வாதாடுவதும் அவன்

"அவ்வாலிபன் இங்குவந்ததை நான் பார்க்கவில்லை" என்பதும் இவர்கள் செவிகளில் விழுந்தன.

வில்வநாதன் தளத்தின் ஓரத்தில் சென்று நின்று எதிர்த்தளத்தை நோக்கினன். அவன் கருத்தை யறிந்த பூபாலன் "அய்யோகடவுளே! ஆத்திரப்படவேண்டாம். ஆயினும் என்ன செய்வதென்று ஒன்றும் தோன்றவில்லையே..." என்றபோது, வில்வநாதன், "நண்பனே! உங்களுடைய அன்பிற்காகவும், நீங்கள் என்மேல் இரக்கம் காட்டி என் ஆபத்திற்காக வருந்துவ தற்காகவும் மிக்க வந்தன மளிக்கிறேன். பலகை யகப்படாதது உங்கள் குற்றமல்ல. ஆ! அவர்கள் படிகளில் ஏறுகிறுர்கள். ஒரு விநாடி ஆலசியமும் மோசம்......" என்றதும் பூபாலன் படிகள் இருக்கும் இடத்தினருகில் சென்று எட்டிப்பார்த்தான். அச்சமயம் சமீபத்தில் காற்றில் எதுவோ வேகமாய்ச் செல்வதுபோன்ற சத்தத்தைக் கேட்டுத்திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தான். வில்வநாதன் அங்கில்லை. அய்யோகடவுளே யென்று ஓடிப்போய் பெருந்திகிலோடும் ஆவலோடும் எதிர் வீட்டின் தளத்தை நோக்கினன். அங்கு நின்றுகொண்டு வில்வநாதன் தன்கைக்குட்டையை மேலேதூக்கி விசிரிச் சமிக்கைகாட்டிவிட்டு, மறுவிநாடி அங்கிருந்த படிகளிலிறங்கி மறைந்து விட்டதைக் கண்டான். உடனே அவன் மனதில் மிக்க வியப்பும் சந்தோஷமும் உண்டாயின. அவன் தன் கையிலிருந்த தீபத்தை யணைத்துவிட்டுக் கீழிறங்கினன்.

வில்வநாதன் பிராணபயத்தால் துணிந்து தளத்தின் மேலிருந்து எதிர்வீட்டுத் தளத்திற்குத் தாண்டினன். அங்குசென்று திரும்பிப் பார்த்தபோது அவனுக்கே "அப்பா! இதை யெப்படித் தாண்டிவிட்டோம்" என்று, மிக்க வியப்பாகத் தோன்றியது. அங்கிருந்து மெது

வாய்ப் படிகளிருக்கும் இடத்தைக்கண்டு பிடித்துக் கீழே இறங்கத் தொடங்கினன். அந்த வீடு ஒரு பாழடைந்த குடியில்லாதவீடு. படிகள் அங்கங்கு சேதப்பட்டிருந்தன. ஆகையால் அவன் மிக்க ஜாக்கிரதையோடு இறங்கவேண்டியதாயிற்று. கீழ்கட்டிற்கு வந்ததும் உடனே வெளிப்பட்டுப் போய்விடலாமா வென்று கருதினன். ஒரு சமயம் துஷ்டகேதுவின் ஆட்கள், நாம் இன்னும் எதிர்வீட்டிலேயே ஒளிந்திருப்பதாக வெண்ணி, வீதியில் நின்று பார்த்துக்கொண் டிருக்கிறார்களோ வென்று பீதியொரு பக்க மிருந்ததால் மெதுவாகக் கதவின்சந்தில் பார்த்தான்.

அவனுக்கு நற்காலமாகவே யிருந்தது. ஏனெனில் மாதவன் வீட்டின் கதவு உடைக்கப்படும் சத்தத்தைக் கேட்டு என்னமோ விசேஷம் நடக்கிறதென்று கருதி வீடுகளிலிருந்த ஜனங்கள் வெளியில் வந்து வீதியில் பெருங் கூட்டமாய்க் கூடிவிட்டார்கள். யாவரும் எதிர் வீட்டின் மேலேயே கண்ணோக்கம் வைத்திருந்ததால் வில்வநாதன் அக்காலிவீட்டின் கதவை மெதுவாய்த் திறந்துகொண்டு வெளியில் வந்ததை யாரும் பார்க்கவில்லை. அவன் வெளியில் வந்ததும் ஜனக்கூட்டத்தில் கலந்துகொண்டான். அவன் ஜனக்கூட்டத் தோடேயே சற்றுநேரம் இருந்து சமயம் பார்த்து மெதுவாக ஒரு சந்தில்நுழைந்து துரிதமாய் நடந்து வீடுபோய்ச் சேர்ந்தான். துஷ்டகேது மாதவன்வீடு முழுமையும் நன்றாய்த் தேடிப் பார்த்தான், வில்வநாதன் காணப்படவில்லை. அவன் எப்படிப்போய்விட்டானென்று உத்தேசிக்கக்கூடாமல் மிக்ககோபத்தோடு தன் ஆட்களை யழைத்துக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பினன்.

அங்கு சென்றதும் அவன் தன் ஆட்களையவரவர்கள் அறைக்குப் போகும்படி கூறிவிட்டுத் தன் அறையில் உட்

கார்ந்து அங்கிருந்த தன் மூதாதைகளின் படங்களையுற்று நோக்கிக் கொண்டே சிந்தித்தான். வில்வநாதன் தன் கைக்குச் சிக்காமல் போய்விட்டது அவன் கோபத்தை யதிகப்படுத்தி விட்டது. ஆகவே "சே கொஞ்சமேனும் மாத்ரால் எள்ளளவு அகௌரவமும் இதுகாறும் நேரிடா திருந்த புராதன குடும்பத்திற்கு மானக்கேட்டை யுண் டாக்கிய மாதைக் கொன்றுவிடுவதுதான் தக்கதண்டனை யாகும்" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

ஆ! கோபம் மகாகொடிது! மகாகொடிது! அதனாலேயே ஆன்றோர் அதைச் சண்டாளம் என்று வெறுத்துக்கூறி யிருக்கின்றனர். அது புத்தியைப் பிரகாசிக்க ஒட்டாமற் செய்து விடுகிறது. வில்வநாதன்மேல் வஞ்சம் தீர்த்துக் கொள்ளத் தான் செய்தமுயற்சி தவறிப்போய் விட்டதனால் துஷ்டகேதுவின் கோபம் மிக்க அதிகமாகி நாம் கொல்ல நினைப்பது ஒருஸ்திரீயை—அதிலும் நம்மை யின்று கண்ணுக்குக் கண்ணாய்ப் பாதுகாத்து வளர்த்த தாயை—என்பதை யவன் சிந்திக்காவண்ணம் செய்து விட்டது.

இரவு சுமார் பத்துமணிக்குமேலிருக்கும். அப்போது துஷ்டகேது தன் மனதில் இருக்கும் கோபமும் பாதக எண்ணமும் வெளியிற் புலப்படா வண்ணம் கஷ்டத்தோடு அடக்கிக்கொண்டு தன் கைப்பெட்டியைத் திறந்து அதிலிருந்து ஒரு சிறிய பாஷாணபுட்டியை யெடுத்துத் தன்ஜேபியில் வைத்துக்கொண்டு தாயாரின் அறைக்குச் சென்றான்.

அச்சீமாட்டிக்கு வயது நாற்பதிருக்கும், ஆனால் அந்த நாட்டு மாதர்களுக்கு அது அழகுகுன்றிக் கிழத்தனம் தோன்றும் வயதல்ல; அதிலும் அச்சீமாட்டி மிக்க அழகு வாய்ந்தவர்கள். கணவனிறந்தது முதல் அந்தம்

மாள் மற்ற உயர்தர மாதரைப்போல் விருந்து கேளிக்கை முதலியவைகள் நடக்கு மிடத்திற்குச் செல்வதில்லே. வியாதி தரித்திரம் துன்பம் இவற்ருல் பீடிக்கப்படும் யோக்கியர்களே நேரிற்கண்டு அவர்களுக்குத்தக்க உதவி செய்வதையே கைங்கரியமாகக் கொண்டு சதா அதே வேலேயில் காலங் கழிப்பவர்கள். துஷ்டகேதுவுக்கு அத்தகைய குணங்களே மிக்க அலட்சியம். அவன் சுபாவத்திற்கு அவையின்னவை யென்றே தெரியாது. அந்தம்மாள் வேறுவிதமான எத்தகைய உலக விவகாரங்களிலும் தலேயிடுவதில்லே. துஷ்டகேது எப்போதேனும் கருதும் போது தன் தாயாரைக் காண்பதன்றி மாத்ருபக்தியோடு தன் எண்ணங்க ளனேத்தையும் அவர்களிடம் கூறி மனங் கலந்து நடப்பதில்லே. ஆகையால் அவனுடைய துஷ்டத்தனமான நடவடிக்கைகள் ஒன்றுமே அந்தம்மாளுக்குத் தெரியாது.

இத்தகைய புத்திரன் இரவு பத்துமணிக்குமேல் திடீலென்று தன்னிடம் வந்ததைக்கண்டு அச்சீமாட்டி மிக்க வியப்படைந்தாள். ஆனல் தன்மைந்தனே யன்போடு வரவேற்று தன் அருகிலிருந்த ஆசனத்தில் அமரச்செய்தாள். அவள் அப்போதுதான் போசனம் செய்தபடியால் எதிரில் இருந்த மேஜைமேல் பலவகை யுணவுப்பொருள்களும் பழவகைகளும் உயர்ந்த ஒயின் என்னும் திராட்ச பானமும் வட்டிக்கப்பட்டிருந்தன.

துஷ்டகேது தன் மனக்கொதிப் பனேத்தும் அடக்கிக்கொண்டு, "அம்மா! இருவரும் நம் தேகசுகத்திற்காகக்கொஞ்சம் ஒயின் அருந்துவோம். அப்படியருந்திப் பல நாளாயின" என்ருன். தாயார் "ஆ மகனே! நாம் அடிக்கடி யப்படிச் செய்யாதது என்குற்றமல்லவே: அப்படியே செய்வோம்" என்று கூறிக்கொண்டே இரண்டு

பொற்கிண்ணங்களை யெடுத்து அவன் எதிரில் வைத்தாள். துஷ்டகேது உடனே எதிரிலிருந்த ஒயின் புட்டியையெடுத்து இரண்டு கிண்ணங்களிலும் விட்டுவிட்டுத் தாயாரை நோக்கி, அம்மாதின் இடதுபக்கம் சற்று எட்டவிருந்த பழத்தட்டைச் சுட்டிக்காட்டி "அம்மா அதையெடு" என்றான்.

சீமாட்டி யவ்வாறே திரும்பி அதை யெடுப்பதற்குள் அவன் ஜேபியிலிருந்த புட்டியைத் துரிதமாயெடுத்து அதிலிருந்த விஷத்தை ஒரு ஒயின் கிண்ணத்தில் ஊற்றிவிட்டான். அதற்குள் அம்மாது பழத்தை யெடுத்து அவன் முன்பாக வைத்தாள். அக்கொலைபாதகன் உடனே விஷம்கலந்த கிண்ணத்தைத் தன் தாயிடம் கொடுத்துவிட்டு மற்றொரு கிண்ணத்தைத் தான் எடுத்துக்கொண்டான். மறுநிமிடம் இருவரும் ஒயினைப்பருகி விட்டார்கள்.

தன்தாய் அக்கிண்ணத்தை வாயில்வைக்கும் போது ஒரு விநாடி அவன்மனம் பதைத்தது; அக்கிண்ணத்தை யுடனே தட்டிவிட வெண்ணினான். மறுவிநாடி தன்முன்னோர் மானத்திற்கு அழிவு உண்டாக்கியவள் என்ற எண்ணம் வரவும் பேசாம லிருந்துவிட்டான். ஆயினும் அச்சமயம் அவன் முகத்தில் ஒருவிதப் பயங்கரமான விகாரம் உண்டாகியது. அதைக்கண்ட அவன் தாயார் பீதியடைந்து "மைந்தனே ! ஏன் இப்படி என்னைப் பார்க்கிறாய்? என்ன உனக்கு?" என்று கூவினாள்.

துஷ்டகேது:—"அம்மா! சற்று முன்பு ஒரு வாலிபன் உன்னிடம் பேசிக்கொண்டிருந்து விட்டு சென்றானல்லவா? அவன் என் ஜன்ம விரோதி" என்றான்.

அதைக்கேட்டதே அவ்வுத்தம குணவதி திடுக்கிட்டு "சேசே! அவன் மிக்க நல்லவன். ஒருவர்மேலும் விரோதம் பாராட்டும் சுபாவ முடையவனல்ல" என்ருள்.

துஷ்டகேது "இது மூடத்தனமான பேச்சு. அவன் இரண்டு முறை யெனக்கு எத்தகைய அவமானத்தை யுண்டாக்கி யிருக்கிறுன் என்பது உனக்குத் தெரியுமா?" என்ருன். சீமாட்டி "நீயவனை விரோதியாகக் கருதி யிருக்கிருய் என்றுமட்டும் கூறினுன். ஆனல் அதன் விவரம் இன்னதென்று அவன் கூறவில்லை" என்ருள்.

துஷ்டகேது:—"அப்படியாயின் நான் கூறுவது வில்வநாதன் என்று நீ அறிந்துகொண்டாய்" என்று கூறிக்கொண்டே தாயாரை யுற்று நோக்கினுன்.

தாயார்:—சற்று நேரத்திற்கு முன் ஒரு வாலிபன் என்னேடு பேசிக்கொண்டிருந்து சென்றதை நீ காணவில்லையா. அவன் மிக்க நல்லவன். நீயவனிடம் இருமுறை யுத்தம் செய்து தோல்வியடைந்தாலும் கூட நீ அவனைப்பற்றிப் பெருமையாகவே கருதவேண்டும். ஏனெனில் அவன் அதைப்பற்றி பெருமையாகக் கூறிக்கொள்கிறவனல்ல.

துஷ்ட:—நான் அவனை விரோதியாகக் கருதுவதறிந்திருந்தும் நீயவன் இங்கு வரும்படி அனுமதி யளித்ததோடு இரகசிய வழியின் சாவியையும் அவனிடமளித்திருக்கிருய்.

தாயார்:—மைந்தனே! இதற்காக நீயென்மேல் கோபிக்கலாகாது அவன் ஒருவிபரமும் கூருமல் ஏதோ சில அதிருப்தியான சம்பவங்கள் நேர்ந்ததாகவும் அதனுல் நீயவனை விரோதியாய்க் கருதலாகுமென்றும் ஆதலின் தான் இனி இங்கு வருவது உனக்குக் கோபத்தை யுண்டாக்குமென்றும் கூறினுன். அவ

னுடைய களங்கமற்ற உள்ளமும் குற்றமற்ற நடக்கையும் எனக்குத் தெரியும். ஆகையால் "நீ வீட்டில் நுழைந்துவர வேண்டாம். தோட்ட வழியாய் நேராக என்னறைக்கு வரலாகும்" என்று நான் சாவியை யவனிடமளித்தேன். இதற்காக நீ பிரமாதமாய்க் கருதவேண்டுவதில்லையே.

துஷ்ட:—"ஓ போதும்போதும். இன்னும் பொறுமையாயிருக்க என்னல் முடியாது. இதோ பார் உன் யோக்யதையைப்பற்றி என்ன கூறுகிறார்கள். அதை மறுத்துக்கூற உனக்குத் தைரியமிருக்கிறதா பார்" என்று ஆத்திரத்தோடு கூறிக்கொண்டே தனக்கு வந்த கடிதத்தை யெடுத்துக்கொடுத்தான்.

அக்கடிதத்தை வாசித்ததே அந்த உத்தமியின் மனம் எம்மாதிரி பதை பதைத்திருக்குமென்பதை இதை வாசிப்போரே யூகித்துணரலாகும். இவன் இதுகாறும் பேசிய மாதிரிக்குக் காரணம் இப்போது அச்சிமாட்டிக்கு நன்கு விளங்கிவிட்டது. அம்மாது மனம் துடிதுடித்து,

"அய்யோ மகனே! நீ......நீ...... இந்த அபாண்டமான கடிதத்தை நம்பிக்கொண்டாயா?" என்றாள்.

துஷ்டகேது அடங்காக் கோபம் கொண்டு, "ஓ பொய்க்காரியே! நீ உடாய்ப்பதில் பயனில்லை. சற்று முன்பு நீ யவன்மேல் வைத்திருக்கும் அன்பைப்பற்றி அவன் உன்னிடம் புகழ்ந்து கூறியதும் யாவும் நான் காதாரக் கேட்டேன்........" என்றதே,

அச்சிமாட்டி சொல்லொணு வியாகூலத்தோடு "அட மூடனே! நான் அவன் பரிதாபமான நிலைமைக்காக அவன்மேல் இரக்கம் வைத்து காட்டிய மாத்ருவாஞ்சையைப் பற்றி யவன்கூறியதை நீ என்ன தைரியத்தோடு இப்படி மூடத்தனமான அர்த்தம் செய்துகொண்டாய்" என்றாள்.

துஷ்டகேது அதற்குமேலும் தன் ஆத்திரத்தை யடக்கமுடியாமல் "ஓ அசத்தியமாதே மரணத் தருவாயி லாவது உண்மையைக்கூறி ஆண்டவனிடம் மன்னிப்பு கேட்டுக்கொள். ஆம். உன் மரணம் நெருங்குகிறது. இனி எப்படிப்பட்டவர்களாலும் அதைத் தடுக்க முடி யாது" என்ருன்.

அவ்வார்த்தைகளைக் கேட்டதே தாயின் மனம் நரக வேதனை யடைந்து "அட சண்டாளனே நீ பெற்ற தாயைக் கொல்லத் துணிவாய் என்று நான் கருதக்கூட வில்லை. ஓ! இல்லை யில்லை அட கொலை பாதகா! ஆம் ஆம் விஷமே என் தேகத்தில் ஏறுகிறது. அடடா உன்போன்ற தாயைக் கொல்லும் மாபாதகன்கூட நான் இறந்தபின் என்னை அகௌரவமாகக் கருதலாகாது. அடத் துரோகி என் பிராணன் போகிறது. அருகில்வா. அந்த உத்தமன் ஒருவர்மேலும் காதல் கொள்ள முடியாதவன். அது அவ னுடைய இரகசியம். ஆயினும் நீ யுண்மையை யுணரு மாறு அதைக் கூறுகிறேன். என் ஆவி நீங்குகிறது. சீக் கிரம் கிட்டவா. குனி குனி" என்று அவன் செவி யரு கில் வாயை வைத்து "வில்வநாதன்......அவன்....அவன் ஆ மார்பை யடைக்கிறது — கொலைபாதகா அவன்...... கு......" என்று ஒரே யொருவார்த்தை கூறியதும் ஆச னத்தில் சாய்ந்துவிட்டாள். மறுவிநாடி அவ்வுத்தமி சவ மாய் விட்டாள்.

அந்த ஒருவார்த்தை யின்னதென்று நாம் இங்கு வெளியிடாவிட்டாலும் அது எத்தகைய தெனக் கூறுகி ருேம். அந்த ஒருவார்த்தையால் வில்வநாதன் ஒருவர் மேல் காதல் கொள்ளத்தக்கவனல்லவென்றும், அவன் இரகசியமறிந்த எந்த மாதும் அவனேடு சம்பந்தம் வைத் துக்கொள்ளமாட்டாளென்றும் நன்கு விளங்கும். ஆகை

யால் அவ்வார்த்தையைக்கேட்டதும் அவன், "அய்யோ கடவுளே! கொலை பாதக சண்டாளனாகினேனே அம்மா! அம்மா! என்னைச் சபிக்காதே. அய்யோ என்னை யேறெடுத்துப்பார்" என்று கண்களில் நீர் பெருகத் தன் தாயின் கரங்களைப் பற்றிக் கொண்டான். ஆனால் அக் கரங்கள் உயிர்ப்பு நீங்கிச் சில்லிட்டுவிட்டன. இந்த உணர்ச்சி அவன் மனதிற்பட்டதும் அய்யோவென்றலறி மூர்ச்சை யடைந்துத் தரையில் வீழ்ந்தான்.

இக்கோபத்தின் கொடுமை யிவ்வாறிருப்பதாலன்றோ பெரியோரதை யிகழ்ந்து கூறியிருக்கின்றனர். அந்தோ தன் தாயைத் தான் கொலை செய்ததற்குக் காரணமே யில்லை யென்றும் அவள்மேல் அபாண்டம் கூறப்பட்ட தென்றும், அதைத் தான் நம்பியது மூடத்தனமென்றும் அறிந்த துஷ்டகேதுவின் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை எவ்வாறு விவரித்துக் கூறலாகும். அந்தோ அதனினும் நரகவேதனை மிக்க நலம் என்று கூறலாகும். கோபம் வருவதை யடியோடடக்கிவிடுவது அனைவரா லுமே ஆகிறகாரியல்ல. ஆனால் கோபம் வந்தாலும் அச் சமயம் ஆத்திரப்பட்டு அதனாலுண்டாகும் மனப்போக் கின்படி ஒரு காரியத்தைச் செய்யவிடாது சிந்தித்து கோபத்தை யடக்கி விடுவதே அறிவாளிகளின் இலட் சணமாகும். துஷ்டகேதுவுக்கு வில்வநாதன்மேலிருந்த கோபம் பொறாமை வஞ்சம் முதலியவைகளே அவனை நிதானித்து "இக்கடிதம் யார் எழுதி யிருப்பார்கள் இது உண்மையா யிருக்குமா? இதை நாம் நிதானமாய் ஆராய் ச்சி செய்தபின்பே இதைப்பற்றி என்ன செய்வதென்று தீர்மானிக்கவேண்டும்" என்று சிந்திக்கொணாவண்ணம் செய்து விட்டது. அறிவாளிகள் பொறாமை கோபம் இரண்டிற்கும் இடந்தரலாகாது.

40-வது அத்தியாயம்.

துஷ்டகேது இராணி முதலியவர்கள்மேல் வஞ்சந் தீர்த்துக்கொள்ளச் செய்யும் முயற்சி—தோட்டக்கார முனியனும் வில்வநாதனும்—கடவுளே துஷ்டன் தண்டனை யடைய வழி ஏற்படுத்துகிறார்—வில்வநாதனும் துஷ்டகேதுவும் சந்தித்தல்—பயங்கரமான இரகசியங் களுக்காக ஒப்பந்தம் செய்துக் கொள்ளல்.

துஷ்டகேதுவுக்கு மூர்ச்சை நீங்கி ஸ்மரணை வந்த போது தான் மஞ்சத்தில் சயனித்துக்கொண் டிருப்பதையும் தன் தாயின் தோழிகளிலிருவர் தன் அருகிலிருப்பதையும் உணர்ந்து திறந்த கண்களை மறுபடி மூடிக்கொண்டு நடந்த விஷயத்தைப்பற்றி சிந்திக்க லானான்.

அவன் சிந்தித்துக்கொண் டிருக்கையில் தோழிகள் அவன் மறுபடி மூர்ச்சை யடைந்ததாகக்கருதி "சீமாட்டி தன் புத்திரனோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் திடீ லென்று ஏதோ வியாதியால் இறந்துபோயிருப்பார்கள். அதைக் கண்ட இவருக்குண்டான மனோவேதனையைச் சகிக்க முடியாமல் இவர் மூர்ச்சை யடைந்து விட்டிருப் பார்'' என்று பேசிக்கொண்டார்கள்.

துஷ்டகேது சற்றுநேரங் கழிந்தபின் எழுந்து அவர் கள் எண்ணியிருந்தபடியே கூறிவிடுவது நலம் என்று கருதித் தன் தாயார் திடீலென்று மார் நோகிறதென்று பரிதபித்ததாகவும் தான் எழுந்து உதவிக்கு யாரை யேனும் கூப்பிடுமுன் விழுந்து இறந்துபோனதாகவும் மிக்க துயரத்தோடு கூறினான். அச்சமயம் இவன் தன்

தாய் சாதாரண மரணமடைந்திருந்தால் படும் வேதனை யைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அதிகவேதனையை புண்மையாகவே அடைந்திருப்பதால் அம்மாதர்கள் இவன் கூறியதில் சந்தேகங்கொள்ளவில்லை.

அதன் பிறகு துஷ்டகேது அங்கிருந்து தன் அறைக் குச் சென்று உட்கார்ந்து காவலனையும் தோட்டக்கார முனியனையும் உடனே யழைத்து வரும்படிக் கட்டளை யிட்டான். இரண்டொரு நிமிடங்களில் காவலன் அவன் முன்வந்து நின்றான். துஷ்டகேது அவனை யுற்று நோக்கி பயங்கரமான முகத்தோடு "அடே சற்று முன்னே இந்த விடத்தில் நாம் பேசினோமல்லவா! அந்த சங்கதியைப் பற்றி யாரிடமேனும் பிரஸ்தாபித்தாயோ உன் பிராணன் நிலைக்காது. தெரிகிறதா பத்திரம்" என்றான்.

காவற்காரன் உளம் நடுங்கி "அய்யோ மகாராஜா! நான் எனக்குச் சம்பந்தமல்லாத எந்த விஷயத்தையும் என் மனதிலேயே சிந்திக்கிற சுபாவமில்லை" என்று கூறி விட்டுச் சென்றான். ஆனால் மிக்க உத்தமியாகிய தன் எஜ மாட்டி படுகொலை செய்யப்பட்டாள் என்பது உண்மை என்று அவன் தனக்குள் சிந்தித்துத் துயரப்பட்டுக் கொண்டே சென்றான். துஷ்டகேது தோட்டக்காரன் வரவிற்கு எதிர்பார்த்துக்கொண் டிருந்தான்.

இரண்டொரு நிமிடங்கள் கழித்து ஒரு வேலைக்காரன் திகிற்பட்ட முகத்தோடு அவனிடம் வந்து, "மகாப்பிரபு தோட்டக்கார முனியனை யெங்கும் காணோம். சற்று நேரத்திற்கு முன் சீமாட்டி யவர்கள் இறந்துபோன சங் கதி சமயலறையிலுள்ளவர்களுக்கு எட்டியபோது அவன் அங்கிருந்தானும். அச்சங்கதியைக் கேட்டதும் அவன் ஓர் பயங்கரமான கூச்சலிட்டலறி முகம் விகாரமடைந்து உடனே துரிதமாய் அங்கிருந்து போய்விட்டானும். எங்

கும் தேடிப் பார்த்தேன். அவன் அகப்படவில்லை'' என்ருன்.

இச்சங்கதி துஷ்டகேதுவின் மனதிற்கு மிக்க பீதியையுண்டாக்கிவிட்டது. ஏனெனில் தன்தாயார் கொல்லப்பட்ட சங்கதி அவன் மனதிற்குப் புலப்பட்டிருக்கிறது என்று துஷ்டகேதுவுக்கு நன்கு விளங்கிவிட்டது. தான் செய்த அக்கிரமகொலை தன் மனதைச்சுடும் வேதனையைச் சகித்துக்கொண்டு, தனக்கு ஒரு கெடுதியும் வராதென்ற நம்பிக்கையோடிருப்பதே பெரிய கஷ்டம். அதோடு "இச்சங்கதி அதிகாரிகளுக்குத் தெரிந்துபோய் எச்சமயம் நம்மைப் பிடித்துக்கொள்வார்களோ, மரணதண்டனையும் அவமானமும் நேரிடுமோ'' என்ற பெருந்திகிலையும் சகித்துக்கொண்டிருப்பதெனின் எவ்வளவு வேதனை? கடைசியில் "முனியன் இந்த இரகசியம் தனக்குத் தெரிந்துவிட்டதென்று தன்னையெங்கு கொன்றுவிடுவார்களோ என்ற பயத்தால் ஓடிவிட்டிருப்பான். ஆயினும் நம்மைக் காட்டிக் கொடுக்கத்தக்க அவ்வளவு விவகாரத்திற்குச் செல்லமாட்டான்'' என்று சிந்தித்துத் தன் மனதைத் தேற்றிக்கொண்டு, தனக்குவந்த அக்கடிதத்தை யெடுத்து உற்றுநோக்கினன்.

அக்கடிதம் தன்மேல் வஞ்சந் தீர்த்துக்கொள்ளக் கருதும் விரோதிகளாலேயே எழுதப்பட் டிருக்கவேண்டுமென்று இப்போது அவன் மனதிற்குப் புலப்பட்டது.

நமக்கு அத்தகைய விரோதிகள் யார் இருக்கிருர்களென்று சிந்தித்தான். உடனே அவன் மனம் அரசியின் அரண்மனையை நாடிற்று. "ஆம் இராணியின் கட்சியார்களே இதைச் செய்தவர்கள். சண்டாளர்கள். மூடர்கள் இப்படி யெழுதிவிட்டால் நான் உடனே கோபாவேசமடைந்து கத்தியை யுருவிக்கொண்டுபோய் தட்சணம் என்

தாயாரைக் கொன்றுவிடுவே னென்றும் அப்படிக் கொன்று விட்டால் உடனே பிடிக்கப்பட்டு அவமானத் திற்கும் உலக தூஷணைக்கும், இன்னும் மரணதண்டனைக் கும் ஆளாவேன் என்றும் அதோடு தங்களுக்கு விரோ தியே யில்லாமல் தாங்கள் நிம்மதியாய்த் தங்கள் அக்கிர மத் தொழில்களைச் செய்துகொண்டிருக்கலா மென்றும் கருதிக்கொண்டார்கள். சுத்த மூடர்கள். இப்போது இது பாஷாணத்தால் நடந்த சங்கதி — இது வெளிவரப் போகிறதில்லை. ஆனால் இனி சும்மா யிருக்கலாகாது. நம் மேல் மரணக் குற்றம் ஏற்படும்படி சதிசெய்த சண்டாளர் களை யின்னமும் சும்மாவிடலாகாது. இனிநாம் இவர்கள் மேல் உண்மையான குற்றத்தைச் சுமத்தி அதை நாமே முன்னின்று ருசுப்படுத்தி இவர்கள் தக்க தண்டனை யடை யும்படி செய்யவேண்டியதே காரியம்" என்று தனக்குள் உறுதியான தீர்மானங்கொண்டான்.

துஷ்டகேது உடனே எழுந்திருந்துக் கொஞ்சம் ஒயின் அருந்திவிட்டுக் கடிதம் முதலிய எழுது கருவிகளை யெடுத்துக்கொண்டு ஆசனத்திலமர்ந்து கீழ்க்கண்ட ஒரு மனுவை வரையலாயினன்:—

"மகாகனம்பொருந்திய சங்கைக்குரிய ஸ்ரீஜகத் குரு வாகிய குருசுவாமிகளவர்கள் திருச்சந்நிதானத்திற்குத் தங்கள் அடிமைகளில் ஒருவனாகிய நவீனபுரி துஷ்டகேது இராஜகுமாரன் அதிவினயத்தோடு செய்துகொள்ளும் மனுவாவது:—

சுவாமிகளே! தங்களுடைய பிரதிநிதியாகிய இந்நாட் டுக்குரு அவர்களால் தங்கள் கட்டளைப்படி முடி சூட்டப் பட்ட அமரநாதம் இராஜகுமாரனைக் கொலை செய்தவர் களைத் தகுந்தபடி இன்னும் தண்டிக்காமல் விட்டிருக்க லாகாதென்று விண்ணப்பித்துக் கொள்கிறேன். தங்க

ளைத் தண்டிக்கக் கூடியவர்கள் ஒருவருமே யில்லை என்ற அகங்காரத்தால் அவர்கள் செய்யும் அக்கிரமங்களும் அவர்களுடைய அயோக்கிய நடக்கைகளும் அளவுமீறி யிருக்கின்றன. அவர்கள் நடக்கைகளால் இந்த நாட்டிற்கும் நமது மதத்திற்குமே பெரிய மானக்கேடாக விருக்கிறது. ஆகையால் சுவாமிகள் இங்கிருக்கும் பிரதம குருவுக்கும் பிரதம நியாயாதிபதிக்கும் கட்டளை பிறப்பித்து, ஜனகாம்பாள் இராணி 1, இரத்னங்கி 2, புண்ணியகோடிப் பிரபு 3, பத்மாபாய் சிமாட்டி 4, டாக்டர் தங்கவேலுப் பிள்ளை 5, இராஜாங்கக் காரியதரிசியாகிய விக்கிரம நாதன் 6. இவர்கள் அறுவர்களையும் நீதிச்சபைக்கு வரவழைத்து விசாரிக்கும்படிச் செய்யவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன். நானே முன்னின்று இவர்கள்மேல் குற்றம் சாட்டித் தக்க அத்தாட்சிகளைக்கொண்டு ருசுப்படுத்தி வைக்க ஆயத்தமாக விருக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் அடிமை
துஷ்டகேது."

துஷ்டகேது இதை யெழுதி முடித்து உடனே இதை யொரு ஆளிடம் கொடுத்து ஜெகத்குருவினிடம் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கும்படி ஏற்பாடு செய்தான்.

மறுநாட்காலை வில்வநாதன் தன் படுக்கையினின் றெழுந்ததும் அங்கசுத்தி செய்து காலையுண்டி யருந்திய பின் நன்றாய் உடுத்திக்கொண்டு வெளியிற் புறப்பட்டான். உடனே ஆலசியமின்றி தங்கவேலுப் பிள்ளையைக் காணவேண்டுமென்பது அவனுடைய ஆவல். இராணிசொல்ப வியாதியுற்றிருந்ததால் அவசியம் நேரில் இருந்து உடனே சிகிச்சை செய்வதற்காக டாக்டர் தமது கடமைப்படி இரண்டு இரவுகளாக அரண்மனையிலேயே தங்கியிருக்கி

ளூர். துஷ்டகேதுவுக்கு அநாமதேயக் கடிதம்வந்த சங்கதி வில்வநாதன் அறியான், ஆதலின் துஷ்டகேது தன்மேல் கொண்டிருக்கும் விரோதத்தால் தன்னை இரவு வழிமறித்துக்கொல்ல முயன்ருன் என்று கருதிக்கொண்டான். ஆகையால் அவன் செய்த அக்கிரமத்திற்காக தண்டனை அவனுக்குக் கிடைக்கச் செய்யவும், இனியவன் தனக்குச் சமயம்பார்த்து அத்தகைய தீங்குசெய்யாது தடுப்பதற்காகவும். நடந்தவிஷயத்தை டாக்டர் தங்கவேலுப்பிள்ளையிடம் விவரமாகக் கூறிவிடவேண்டு மென்று தீர்மானித்தே அவரிடம் செல்லப் புறப்பட்டான்.

வில்வநாதன் வீட்டின் வெளிவாயிலேக் கடந்து அடியெடுத்து வைத்ததும் எதிரிலுள்ள செடிகளின் மறைவிலிருந்து ஒரு மனிதன் தட்டென்றுவந்து அவன் எதிரில் நின்ருன். வில்வநாதன் அவனைக் கண்டதட்சணம் அவன் துஷ்டகேதுவின் அரண்மனையி லிருக்கும் தோட்டக்காரனுகிய முனியன் என்று அறிந்து கொண்டு மிக்க வியப்போடு அவனை யுற்று நோக்கினுன்.

முனியன் வில்வநாதனை நோக்கி “வாலிபரே! நீர் மிக்க பரிசுத்த உள்ளமுடைய புண்ணியவான். ஆகையால் உம்மைக்கண்டு பேசியபின்பே ஊரைவிட்டுச் செல்ல வேண்டுமென்று கருதினேன். சில மணிகள் நேரமாக அதோ அந்தச் செடிகளில் மறைந்திருந்தேன்” என்ருன். அவன் உடைகள் இருக்கும் அலங்கோலத்தையும் அவன் முகத்தில் தோன்றியிருந்த விகாரத்தையும் கண்ட வில்வநாதன் ஏதோ விசேஷம் நடந்திருக்கிறதென உணர்ந்து “நண்பனே! என்ன விசேஷம் நடந்தது? நான் அங்கு இரகசியமாக வந்துகொண் டிருந்ததை நீ தனக்குக்கூறவில்லையென்று துஷ்டனுகிய அத்துஷ்டகேது உன்னை வேலையினின்றும் நீக்கிவிட்டானே?” என்ருன்.

முனியன் சட்டென்று மிக்க மிரட்சியடைந்த பார்வையோடு நாற்புறங்களிலும் திரும்பிப்பார்த்து விட்டு "இல்லையில்லை. அவன் என்னைத்தள்ளிவிடவில்லை. அங்கு நடந்த மிக்க கோரமான பெரும்பாதகச் செயலால் நான் ஓடிவந்து விட்டேன்" என்றான். வில்வநாதன் "பாதகச் செயலா? என்ன நடந்தது? சீக்கிரம் கூறு. உன் பார்வையை நோக்க ஏதோ விபரீதம் நடந்திருப்பதாய்க் காண்கிறது" என்றான்.

முனியன்:— "ஆம். ஆம். மகா உத்தமியாகிய அச்சீமாட்டி, எங்கள் எஜமாட்டி" என்றதே,

வில்வநாதன் தேகம் நடுக்கமுற்று, வாய்குழறிக் கொண்டு "அய்யோ தெய்வமே! அச்சீமாட்டி - அந்தம்மாளுக்கென்ன? என்ன சம்பவித்தது?" என்றான். முனியன் கண்களில் நீர் தாரைதாரையாய் விட்டுக்கொண்டே "வாலிபரே! அந்தோ அந்தமகா உத்தமமான சீமாட்டி கொலைசெய்யப் பட்டாள். அதுவும் அவளுடைய புத்திரனாகிய அச்சண்டாளத் துரோகியின் கையாலேயே" என்றான்.

இதைக்கேட்டதே வில்வநாதன் பேரிடி விழுந்தவன் போல் ஆவிசோர்ந்து "அய்யோ கடவுளே!" என்று கண்களில் நீர் துளித்துக் கொண்டே தள்ளாடி விழப் போனவன் சற்று சமாளித்து அங்கிருந்த ஒருமரத்தைப் பற்றிக்கொண்டு நின்றான்.

முனியன்:—"ஆம்வாலிபரே அச்சண்டாளன் தன்தாயை விஷத்தால் கொன்று விட்டான். இரவு திடீலென்று என்னையழைத்து நீர் எப்போதுகடைசிமுறை யங்கு வந்திருந்த தென்று வினவினன். நான் ஒரு களங்கமும் நினையாமல் ஒருமணி நேரத்திற்கு முன்தான் நீர் உள்ளே சென்றதைக் கண்டதாகக் கூறினேன்.

அவன் என்னைப் போகும்படி கூறிவிட்டு, மாரி, கேசவன் இருவரையும் தன்னிடம் அனுப்பும்படி யியம்பினன். நான் அவ்வாறேசென்று அவர்களிரு வரையும் அனுப்பினேன். பிறகு நான் சிந்தித்த போது ஏதோ சதி நடக்கப்போகிற தென்று என் புத்தியிற்பட்டது. அதன்மேல் நான் புறப்பட்டு தோட்டத்திற்குச் சென்று உமக்கு எச்சரிக்கை செய்வதற்காக நீர் செல்லவேண்டிய வழியில் காத் திருந்தேன். நீர் எப்படியோ போய்விட்டீர். நான் உம்மைக் காணத் தவறிவிட்டேன். பிறகு இரண்டு மணிநேரங் கழித்து அவர்கள் மூவரும் உம்மைக் கொல்ல முயன்று துறத்திக்கொண்டு வந்ததாகவும் நீர் எப்படியோ தப்பித்துக் கொண்டு போய்விட்ட தாகவும் சமையல் அறையில் வேலைக்காரர்கள் பேசிக்கொண்டதைக் கேள்விப்பட்டு, நீர் தப்பித் துக்கொண்டதற்காக மிக்க சந்தோஷ மடைந்தேன். என் மனதிற்பட்ட சதிச்செயல் இதோடு முடிந்த தென்று கருதினேன். ஆனல் அர்த்தராத்திரி சீமா ட்டி திடீலென்று இறந்துபோனுள் என்ற வதந்தி யைக் கேட்டதும் எனக்குப் பெருந்திகில் உண்டா யிற்று. நடந்தசங்கதிகளைச் சிந்தித்தபோது எனக்கு உண்மையில் நடந்தது இன்ன விஷயம் என்று ஐய மறப் புலப்பட்டு விட்டது. அத்தகைய மகா உத் தம பத்தினியாகிய பெற்ற மாதாவைக் கொல்லத் துணிந்த சண்டாளன், அந்த இரகசியம் வெளிவராம லிருக்க அதை யறிந்துகொண்ட ஒரு ஏழைவேலைக் காரனைக் கொல்லச் சற்றேனும் பின்னிடைவானே. ஆகையால் உடனே அங்கிருந்து ஓடிவந்துவிட்டேன்.

அப்பா அவன் இரக்கமற்ற கொடிய துஷ்டன்." என்றான்.

வில்வநாதன்: — சண்டாளன் - கொலைபாதகன், தாய்க் கொல்லி - அழிந்து போவான், நண்பனே! நீஎங்கு செல்லப் போகிறாய்? உன்னுடைய ஏற்பாடுதா னென்ன?

முனியன்:—" நான் எல்லா ஏற்பாடுகளும் திட்டமாகச் செய்துக் கொண்டிருக்கிறேன்—துஷ்டகேது விடம் வேலைசெய்த போது கொஞ்சம் பணம் மிச்சம் செய்து வைத்திருக்கிறேன். எனக்கு மனைவிமக்கள் முதலிய கால்கட்டு ஒருவருமில்லை. அங்கநாட்டின் இராஜதானியாகிய புஷ்பகிரி நகரில் என் தமைய னிருக்கிறான். அங்கு செல்லப் போகிறேன்" என்றான்.

வில்வநாதன்:—" ஆ! புஷ்பகிரிக்கா போகிறாய். அவ்வ ளவு தூரமாயினும் நான் உனக்கு உதவிசெய்யக் கூடும். இரு, ஒருவிபரமும் கேட்க வேண்டாம்." என்று சொல்லிக் கொண்டே ஜேபியிலிருந்த எழுது கருவிகளையெடுத்து ஒரு சிறுகடிதத்தில் என்னவோ வெழுதி அவன் கையில் அதைமடித்துக் கொடுத்து, " நண்பனே! நீ இந்த இராஜாங்க எல்லையைக்கடக்கு மட்டும் இக்கடிதத்தின் விலாசத்தைக்கூட பார்க்க வேண் டாம். மிக்க பத்திரமாய் இதை வைத்துக்கொள். இது அக்கிரமஸ்தரை யடக்கவும், அக்கிரமம் செய்யப்படும் ஏழைகளுக்கு உதவிசெய்து நீதியை நிலைநாட்டவுமே கங் கணங் கட்டிக்கொண் டிருக்கும் ஒரு புண்ணிய வானுக்கு எழுதப்பட் டிருக்கிறது. அஞ்சாமல் இதை யவர்கையிற் கொடுத்து நடந்த சங்கதிகள் யாவும் ஒளிக்காமற் கூறி விடு. அந்த ஆளால் உனக்கு எல்லா உதவியுங்கிடைக்கும்.

ஒரு நாள் ஏறக்குறைய அச்சண்டாளன் தன் பாதகச் செயலுக்காக எப்படியும் தக்க தண்டனை யடைவான்.'' என்றான்.

முனியன்:—'' வாலிபரே! என் அருமையான எஜமாட்டியின் கொலைக்குத் தக்கவஞ்சத்தை தீர்த்துக்கொள்வதேயென் முதல்வேலை. அதன்பிறகே என்சொந்த வேலை.'' என்று கூறிவிட்டு அக்கடிதத்தைப்பத்திரமாய் வைத்துக்கொண்டு புறப்பட்டான்.

வில்வநாதன் தன்னிடமிருந்த பணப்பையை யவனிடம் கொடுத்து இதைமறுக்காமல் பெற்றுக்கொள் என்று அவனைப் பலவந்தப் படுத்திய பின் அவன் அதைவாங்கிக் கொண்டான்.

முனியன் சென்றதும் வில்வநாதன் அரண்மனையை நோக்கி நடக்கத் தொடங்கினான். டாக்டரின் வீடு நகர ஓரத்தைக்கடந்து ஒருமைல் தூரத்தில் தனியிடத்திலிருக்கிறதென்று கூறியிருந்தோமல்லவா, இப்போது வில்வநாதன் செல்லும் பாதை ஜனசஞ்சாரமில்லாத விடமாயினும், நறுமணம்வீசும் விருட்சங்களும் செடிகளும் நிறைந்த அழகிய காட்சிகளையுடைய பூமியாக விருந்தது. வாலிபன் மனதில் சொல்லொணா வியாகூலமும் கோபமும் குழப்பமுமாக விருந்ததால் அவன் ஒன்றையும் ஏரெடுத்துப்பாராமல் நடந்துகொண் டிருந்தான். சுமார் அரை மைல் தூரம் சென்றபின் பாதையின் திருப்பமொன்றில் திரும்பியபோது எதிரிலிருந்து துஷ்டகேது வருவதைக் கண்டு திடுக்கிட்டு நின்றான்.

துஷ்டகேது வில்வநாதனை நோக்கி "ஆ! வாலிபனே! உன்னை யிங்கேயேசந்தித்ததற்காக மிக்க சந்தோஷ மடைகிறேன். நான் உன்னைக் கண்டுபேசவே வந்துகொண் டிருக்கிறேன்'' என்றான். வில்வநாதன்

தன் வெறுப்பையும் கோபத்தையும் அடக்க முடியாதவனாகி "ஓ குரூரமான நடக்கையுடைய இராஜகுமாரனே! நீ என்னதான் இராஜகுமாரனாகவிருந்தாலும் அளவு மீறிய உன்னுடைய கொலைபாதகச் செயலை நான் மறைத்து வைப்பேன் என்று மட்டும் கருதவேண்டாம். என் சுபாவகுணம் அத்தகையதல்ல. ஓ கடவுளே! அத்தகைய உத்தமகுணம் வாய்ந்த மகா உத்தமியை — எனக்குத் தாயன்பையளித்து என் மனப்புண்ணை யாற்றும் தைலம் போன்ற மாதாவை என்று காண்பேன்" என்று கண்களில் நீர் துளித்துக் கொண்டே ஒரு மரத்தின்மேல் சாய்ந்துகொண்டு நின்றான்.

தன் தாயின் மரணசங்கதியைக் கேட்டு சந்தர்ப்பத்தை யனுசரித்து இவன் நடந்த சங்கதியை யூகித்துக் கொண்டான் என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்ட துஷ்டகேது "ஓ வாலிபனே! நீ என்னைக் கொடியபாபி யென்று தூஷித்தாலும் நான் அக்கிரமஸ்தனென்று கருதினாலும் என்மேல் பரிதாபம் கொள்வதற்கும் காரணமிருக்கிறதென்பதைச் சிந்தித்துப்பார். அந்தோ இத்தகைய கடிதத்தைக் கண்டால் யாருக்குத்தான் ஆத்திரம்வாராது? இதை வாசித்துப்பார்" என்று தனக்குவந்த அநாமதேயக் கடிதத்தை யெடுத்து அவன்கையி லளித்தான்.

வில்வநாதன் அக்கடிதத்தை வாசித்துப் பார்த்ததும் மனத்துடிப் படைந்து, கண்களில் கோபத்தணல் வீச அதைக் கீழேயெறிந்து காலால் மிதித்துத் துவைத்துவிட்டு ஆத்திரத்தோடு "சண்டாளப் பாதகர்கள், குடியோடழிந்து நாசமாய்ப் போவார்கள். தீவாய் நரகில் வெந்தழிவார்கள், குடிகேடச் சண்டாளர்கள்" என்று சபித்துத் தன் ஆத்திரத்தைச் சற்று தணித்துக்கொண்டு துஷ்டகேதுவை நோக்கி,

சென்னை-600 008
186493

“ பிரபுவே ! நான் பிறந்ததுமுதல் இத்தகையவார்த்தைகளை யுபயோகித்தது இதுதான் முதன்முறை. ஆயினும் உமது அபாரமான அக்கிரமச் செயலுக்கு இது போதுமான காரணமாகாது. என்ன அய்யா ? என்ன அநியாயம் ! எத்தனையோ வருடங்களாக அந்த உத்தமி கடைப்பிடித் தொழுகும் சன்மார்க்க நெறியைச் சற்றேனும் சிந்திக்க வேண்டாமோ ? தன் காலமனைத்தும் தரும நெறியையே நாடி நிற்பதையோசிக்க வேண்டாமோ ? இல்லையில்லை. இத்தகைய அநீதம் மறைத்து விடத் தக்கதல்ல, இன்னொன்று கூறுகிறேன். நீ இம்மாதிரி என்னிடம் சம்பாஷிப்பதுபோல் அபிநயித்துக் கொண்டிருந்து நான் ஏமாறும் சமயம்பார்த்து என்னைக்கொன்று விடக் கருதினுயோ கட்டாயம் உன் பிராணனைவாங்கி விடுவேன், இன்றேல் என் உயிரையெளிதில் விடுவேனென்று கருத வேண்டாம் ” என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே துஷ்டகேதுவின் முகத்தில் பரிதாபமான ஒரு குறியுண்டாயிற்று. அவன் சாந்தமாகவே வில்வநாதனை நோக்கி, “ வாலிபனே ! நான் ஒருபோதும் இனி யுனக்கு எவ்விதத்தீங்கும் செய்யக்கருதேன். அந்தோ கடவுளே ! இதுகாறும் உண்மையுணராமல் செய்த காரியங்களுக்காகவே என்மனம் படும் வேதனைக்கோர் அளவில்லை. என்தாயார் மரணத்தருவாயில் கூறிய ஒருவார்த்தையால் நான் உன்மேல் எவ்விதவிரோதமும் கொள்ளலாகாதென்பதை யறிந்துகொண்டேன் ” என்றான்.

இதைக் கேட்டதே வில்வநாதன் பேரிடி விழுந்தவன்போலாய்விட்டான். ஏனெனில் தன் பயங்கரமான இரகசியத்தை அச்சிமாட்டி உண்மை புலப்படுவதற்காகத் தன் புதல்வனுக்கு வெளியிட்டுவிட்டாள் என்று தெரிந்து

கொண்டான். அது அவனுகச்செய்த குற்றமல்லா விடினும் வினைப்படி ஆண்டவனல் அவனுக் களிக்கப்பட்ட மனோவேதனை யேனும், அக்காலத்தி லிருந்த அத்தேசாசாரத்தின்படி உலக விஷயங்களை மட்டுமே தாங்கள் கண்ட காட்சியாகக் கருதிய அச்சனங்களுக்கு அவனுடைய பயங்கரமான இரகசியம் வெளியாய் விட்டால் சொல்லொணு அகௌரவமாகத் தோன்றும். ஏனெனில் அவனைத்தொடவும் அவன் சகவாசத்திலிருக்கவும் நடுங்குவார்கள். அத்தகைய அவமானத்தைச் சகிக்க முடியாமல் நாம் இறந்துபோவதே நலம் என்று அம்மனிதனுக்குத் தோன்றும்.

ஆகையால் தனக்கு விரோதியும் தன்னைக்கொல்ல முயன்றவனுமாகிய இப்பரம துஷ்டனிடம் தன் இரகசியம் சிக்கிக்கொண்டதை யறிந்ததே, வில்வநாதனுக் குண்டாகிய மனோவேதனைக்கோ ரளவில்லை. துஷ்டகேது இரக்கமின்றி யாவரிடமும் அதைக் கூறிவிடுவான் என்பதில் வில்வநாதன் எள்ளளவும் சந்தேகங்கொள்ளவில்லை. ஆகையால் அவன்மனம் பெருந்திகில் கொண்டது. அடக்கமுடியாத துயரம் உண்டாகியது.

ஆகையால் அவன் மிக்க ஆத்திரங்கொண்டு துஷ்டகேதுவை நோக்கி, "நீ என் ஜன்மவிரோதி; முன்னமே என்னைக்கொல்ல முயன்றவன். அப்படிப்பட்ட உன்னிடம் என் இரகசியம் சிக்கிக்கொண்டது. இனி நான் உயிர் வைத்துக்கொண் டிருப்பதிலும் சாவதே நலம். இதோ! இந்த ஈட்டியால் என்னைக் கொன்றுவிட்டு உன் எண்ணம் நிறைவேறிய தென்று சந்தோஷமாகச் செல்" என்று தன் ஈட்டியை அவனிடம் நீட்டினன்.

துஷ்டகேது:—"வாலிபனே! நீ அதற்காக விசனப்படுவதற்கு ஒரு காரணமுமில்லை. என்னை அப்படிப்பட்ட

அயோக்கியனுகவும் இரக்கமற்றவனுகவும் கருத வேண்டாம். என் விஷயத்தில் நீ பரிதபிக்கக் காரணம் இருக்கிறதென்பதைச் சிந்தித்துப்பார். நான் ஆத்திரப்பட்டு செய்து விட்ட பாபத்திற்காக நான் படும் மனோவேதனையே எனக்கு மடியுமளவும் பெரியதண்டனையாக விருக்கிறது. நீ இதுகாறும் ஒருவருக்கும் தீங்கு நினைத்தவனல்லவென்றும், ஒருவரையும் விரோதியாகக் கருதும் சுபாவ முடையவனல்லவென்றும் என் தாயார் கூறினுர்கள். இப்போது அந்தம்மாளைக் கருதியாவது எனக்குத் தீங்குசெய்யாதே; என் குற்றத்தை வெளியிடாதே. உன் இரகசியம் என்தாய் தன்மேற் கூறப்பட்டகுற்றம் அபாண்டம் என்று நான் உணருவதற்காகக்கூறப்பட்டது. நான் ஒருவருக்கும் அதைவெளியிடுவ தில்லையென்று என்தாயார்மேல் சத்தியம் செய்கிறேன். நீ எப்படியாவது என் விஷயத்தில் பொறுமை காட்டுவாய் என்று நம்புகிறேன்" என்று பரிதபித்தான்.

வில்வநாதன் இயற்கையில் இரக்கமான மனமுடையவன். சற்றுநேரம் சிந்தித்துப் பார்த்த பின், இத்துஷ்டனைப்பற்றி நாம் வெளியிடா விடினும் கடவுள் இவனைத் தண்டிக்காமல் விடார் என்று எண்ணிக்கொண்டு அவன் கூறியபடியே ஒப்புக் கொண்டான்.

41 - வது அத்தியாயம்.

நாதமுனி செய்திருக்கும் பதுமைகளின் அதிசயம்—மரத் தெப்பத்தில் மகாசமுத்திரத்தைக்கடக்கும் கிழவன்—90 - வது நாள் கிழவன் ஒரு தீவைச் சேர்தல்—கிழவன் காட்டுமேனிதரிடம் வசித்திருந்து தன் பிரயாணத்தைத் தொடங்கல்.

துஷ்டகேதுவை விட்டுப் பிறிந்த வில்வநாதன் டாக்டரைக் காண அரண்மனைக்குச் செல்லும் எண்ணத்தை யொழித்து விட்டு பூபாலன் வீட்டைநோக்கிச்சென்றான். இவனைக் கண்டதே பூபாலன் முதலியவர்கள் மிக்க சந்தோஷத்தோடு அவனை வரவேற்றார்கள். கடந்த இரவு அவன் துஷ்டகேதுவிடம் சிக்காமல் மேல் தளத்திலிருந்து தாண்டி எதிர் வீடுபோய்ச் சேர்ந்தது மட்டுமே இவர்களுக்குத் தெரியுமன்றி, பிறகு துஷ்டகேதுவிடத்திலாவது அவன் ஆட்களிடமாவது சிக்கிக்கொள்ளாமல் தப்பித்துக்கொண்டு போய்விட்டசங்கதி யவர்களுக்குத் தெரியாததால், அது விஷயத்தில் மிக்க கலவரமுடையவர்களாகவே யிருந்தார்கள். இப்போ தவனைக் கண்டதே யவர்கள் குழப்பம் நீங்கியது.

வில்வநாதன் பூபாலனுக்கும் அவன் தந்தைக்கும் வந்தன மளித்துவிட்டு, மாடிமேற் சென்று பூபாலன் தமையனைக்கண்டு அவன் முன்பு வாக்களித்தபடி அங்குள்ள மெழுகு உருவங்களில் அடங்கியுள்ள ஆச்சரியத்தைக் காட்டும்படி கேட்டான். முன்பு இராணியும் இராகவனும் அரண்மனையி லிருக்கும் ஆயுதசாலையில் கண்ட பயங்கரமான அற்புதக் காட்சிகளை நேயர்கள் மறந்

திருக்க மாட்டீர்கள். அவற்றையே யிப்போது அவன் காட்டினுன். அவன் இராணியின் உருவத்தை வில்வநாத னுக்குச் சுட்டிக்காட்டி "நண்பனே! இதோ பார் இந்த உருவம் எவ்வளவு யௌவனமும் அழகு முடையதாக விருக்கிறது. இதன் முகத்தில் எத்தகைய பிரகாசமும் காண்போர் உளத்தைக் கவரத்தக்க அழகும் முகவிலாச மும் பொருந்தி யிருக்கிறது. ஆயினும் இந்த யௌவனம் மாறக்கூடிய தென்றும், வாலிபம் நீர்க்குமிழிபோல் நிலை யற்றதென்றும், எத்தகைய அழகும் வாலிபமுமாயினும் கடைசியில் யாவும்மாறி இத்தேகம் காண்போர் வெறுப் படையத்தக்க விகார உருவத்தை யடைந்து முடிவில் நீண்டவும் மனம்சகியா வண்ணம் வீங்கி அழுகிப்புழுத்து மண்ணுங் கட்டிபோல் உதிர்ந்தழியும் என்ற உண்மையை யும் இப்பதுமை அனுபவமாகப் பிரத்தியட்சமாய்க் காட் டக் கூடியது. இதுதான் நான் மிகக் கஷ்டப்பட்டு இதில் அமைத்திருக்கும் அதிசயம். இதோ இப்போது கவனத் தோடு இவ்வுருவத்தைப் பார்த்துக் கொண்டேயிரு" என்று கூறிவிட்டு இராணியின் உருவம் நின்றுகொண் டிருக்கும் பலகையின்கீழ் மறைவிலிருந்த ஒரு ஆணியை முடுக்கினுன்.

உடனே அந்த வுருவத்தில் முன் ஆயுதச்சாலையில் உண்டான மாறுதல்கள் எல்லாம் ஒன்றின்பின் ஒன்றுகக் கிரமமாய் உண்டாகத் தொடங்கின. அதாவது, முன்னே முகத்தின் தேஜசுகுன்றி ஒருவித நீலநிற முண்டாகி மறு நிமிடம் அதுவும்போய் முகம்வெளுத்து, கண்கள் குழி விழுந்து தாடைவற்றி சவத்தின் முகமாய்மாறிவிட்டது. பிறகுதேகம் ஊதத்தொடங்கியதும் அதன் மேலிருந்த உயர்ந்த அழகுவாய்ந்த கம்பீரமான உடைகளும் மக்கிப் போனவைகள் போலாகி கிழிந்துநைந்து நார்நாராகிக்

கீழேவிழத் தேகம் நிர்வாணியாய் ஊதியிருந்து அழுகி வெடித்து பொத்தென்று விழுந்தது. அதில் புழுக்கள் நெளிந்தன.

தன்கண்முன் நடக்கும் இவ்வற்புதங்களைக் கண்ட வில்வநாதன் வியப்பால் பிரமித்து ஒன்றுந் தோன்ருது, ஒன்றுங்கூற நாவெழாது, திறந்தவாய்த்திறந்தபடி, விழித்தகண் விழித்தபடி இமையா நாட்டமுடையவனாக நின்ருன். சுமார் ஐந்து நிமிடங்கள் கழிந்தபின்பு அவன் ஒரு பெருமூச்சுவிட்டு "நண்பனே! இத்தகைய அபூர்வத்தைக் கண்டதாக யாரேனும் என்னிடம் இதற்குமுன் கூறியிருப்பார்களேல் நான் அவர்கள் கனவுகண்டு கூறுவதாகவே கருதுவேன். அப்பா! என்ன ஆச்சரியம்! என்ன சாமார்த்தியம்!'' என்ருன்.

பூபாலன் தமையன் இத்தகைய மாறுதல்கள் உண்டாகும்வண்ணம் அப்பதுமைக்குள் அமைக்கப்பட்டிருக்கும் சூத்திரங்களை யெல்லாம் மறுபடி இயக்கவெண்ணி, முன் முடுக்கிய ஆணியை மறுபடி மாருக முடுக்கினுன். உடனே அப்பதுமையின் கீழிருந்து மறுபடி மாறுதல்கள் உண்டாகிக் கடைசியில் மூன்று நான்கு நிமிடங்களில் அப்பதுமை முன் இருந்தது போலவே காண்போர் மனதைக் கவரத்தக்க நிலைமையை யடைந்தது. வில்வநாதன் சுமார் ஒருமணி நேரம் அவ்வாலிபனிடம் மிக்க அன்போடு சம்பாஷித்துக்கொண்டிருந்து, அவன் தன் மனதிற்கும் புத்திக்கும் கண்களுக்கு மளித்த அற்புத விருந்திற்காக மிக்க நன்றியோடு வந்தனமளித்துவிட்டு தன் வாசஸ்தலத்திற்குத் திரும்பினுன்.

* * * * *

நேயர்களே நாம் நடுக்கடலில் தெப்பத்தில் விட்டுவிட்ட நமது முதியோன் என்ன நிலைமையிலிருக்கிரு

னென்று கவனிப்போம். இப்போது அவன் பவளத்தீவை விட்டுப் புறப்பட்டுத் தொண்ணூறு நாட்களாகின்றன. இதுகாறும் கடலில் பட்ட கஷ்டங்களும், அடைந்த பீதிகளும், சிக்கித் தப்பிய பிராணபத்துக்களும் சொல்ல முடியா. புசல்காற்று மழை இடி மின்னல், சுராமீன், பாம்புகள் முதலிய கடற்சீவன்கள், ஆகிய எல்லா ஆபத்துகளிலிருந்தும் கருணாநிதியாகிய கடவுள் அவனைப் பாது காத்து வருகிறார். அவனுக்கு அவரிடமுள்ள நம்பிக்கை மட்டும் சற்றும் குறையவில்லை. நாளேற வேற, ஆண்டவன் நாம் நமது சந்ததியாரைக்கண்டு அவர்களுக்குச் சந்தோஷ சமாசாரத்தை யறிவிக்கவேண்டுமென்று கொண்ட நாட்டத்தை ஈடேற்றுவார் என்ற நம்பிக்கை அவனுக்கு அதிகமாயிற்று. ஆனால் தொண்ணூறுவது நாள் மாலை சூரியாஸ்தமனமாகும்போது அவனுக்குப் பெருந்திகில் உண்டாய்விட்டது. ஏனெனில் அப்போது ஆகாரமுண்ணத் தொடங்கிய சமயம் இன்னும் இரண்டு வேளை ஆகாரமே யிருக்கிறதென்றும் சுத்தஜலம் ஒரு தேங்காய்க்குடுக்கை ஜலமே யிருக்கிறதென்றும் கண்டான்.

"அய்யோ கடவுளே! கப்பற்சேதத்தால் கடலில் மரிக்க விருந்த என்னை யிவ்வளவு காலமாக அச்சன சஞ்சாரமில்லாத தீவில் வைத்துக் காப்பாற்றி, பிறகு தொண்ணூறு நாட்களாகக் கொந்தளிக்கும் கடலில் நெஞ்சு திடுக்கிடும்படியான எண்ணிறந்த ஆபத்துகளிலெல்லாம் காப்பாற்றிக் கடைசியில் பசியாலும் நீர் வேட்கையாலும் கோரமான மரணத்திற்கு ஆளாகவா வைக்கப்போகின்றனை" என்று பிரலாபித்தான். கடலில் இவ்வளவு தூரம் வந்தும் கடைசியில் நமது ஜன்ம பூமியையும் நம் சந்ததியாரையும் காணுமலே மடிவோமோ என்றெண்ணிய

போது அவன் கண்களில் தாரைதாரையாய் நீர் வடிந்தது. கடைசியில் ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு "சே! இத்தனை வருடங்களாக நம்மை மிக்க அதிசயமான விதமாய்க் காப்பாற்றி நமது குடும்பத்தைப்பற்றியிருந்த பயங்கரமான அக்கோர சாபத்தை நீக்கியருளிய ஆண்டவன் தன் காரியத்தை அறைகுறையாகவா செய்வார்? ஒருகாலுமில்லை. ஓ தயாநிதியே! சர்வவல்லமையுடைய உம்மால் ஆகாதகாரியமொன்றுண்டோ! உன்னை நம்பி மோசம்போனோர் எவரேனு முண்டோ! ஓ கருணாகரக் கடவுளே! புழுவினுங் கடையான நாயேன் அன்று முதல் இன்றளவும் தங்கள்மேல்வைத்த பூரண நம்பிக்கையாலேயே உயிர் வாழ்கின்றேனன்றோ. தங்களை யன்றி எவ்வுயிர்க்கேனும் புகலிடம் பிறிதுமுண்டோ? தங்கள் திருவருளையே பற்றுக்கோடாய்ப் பற்றி யிருக்கும் அடியேனைப் பாதுகாத்தருளும்..........." என்று பிரார்த்தித்துக் கொண்டே நித்திரைபோய்விட்டான்.

அவ்வயோதிகன் கனவில் திவ்யதேஜசுடைய ஒரு மகா புருடன் தோன்றி தெப்பத்தில் இவன் பக்கலில் உட்கார்ந்துகொண்டு தன் கரத்தைநீட்டி "அதோ தெரிகிறது பார் தீவு" என்று தூரத்தில் சுட்டிக்காட்டியதுபோல் தோன்றியது. கிழவன் உடனே சந்தோஷ மிகுதியால் விழிப்படைந்து தட்டென்று உட்கார்ந்தான். அப்போது தான் பொழுதுவிடிந்து சூரியன் கடலுக்குமேல் ஒருசாண் உயரம் வந்திருக்கிறான். கிழவன் தான் கண்டது கனவென்றுணர்ந்தாலும் அவனுடைய ஆவலால் மனநாட்டத்தை யடக்க முடியாதவனாய் கிழக்கு திக்கை யுற்று நோக்கினான். வானமும் கடலும் சேருவதுபோல் தோன்றுமிடத்தில் நீளமான ஒரு கறுப்புப் புகைபோல் தோன்றியது.

அனுபவத்தால் அது பூமியாகவே யிருக்கவேண்டு மென்று கிழவன் மனதிற்பட்டது அவனுக்கு அடங்கா மகிழ்ச்சி யுண்டாயிற்று. ஆனால் உடனே திகிலோடு அதை யடக்கிவிட்டான். ஏனெனில் "நிச்சயமாய்ச் சற்றும் அய்யமின்றி தெரிந்தபின்பே சந்தோஷத்திற்கு இடந் தரவேண்டும். இன்றேல் அதிக துக்கமே பலனாகக் கிடைக்கும்" என்று எண்ணி கண்களை மூடிக்கொண்டு சுமார் கால்மணிநேரம் கழித்துத் திறந்து பார்த்தான். இம்முறை கண்களை மூடாமலே யுற்றுநோக்கத் தொடங்கினான். புகைபோன்றிருந்தது வரவர விசாலமாகப் பரவியது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாகக் கரடுமுரடான கற்களும் குன்றுகளும் நிறைந்த பூமி கண்களுக்குப் புலப்பட்டது.

ஓ! அவ்வயோதிகனுக் குண்டான ஆனந்தத்தை யென்னெனக் கூறுவாம். அவன் உடனே ஆனந்தக் கூத்தாடினான். கடவுளை வாழ்த்திப் பாடினான். சற்றுநேரம் கண்களை மூடிக்கொண்டு தோத்திரம் செய்தான். அப் பூமி நாகரீகமானதும் கண்களைக் கவரத்தக்கதுமான தன் தாய் நாட்டின் கரையல்லவென்று தெரிந்தாலும் மூன்று மாதகாலமாய்ப் பூமியைத் தரிசிக்காதிருந்ததோடு, சுத்த ஜலமின்றிக் கடலில் தத்தளிக்கும் ஒருவனுக்கு ஏதோ ஒரு பூமியைக் காண்பது பேரானந்தமேயாகும். அதிக பலனுண்டாகாவிடினும் தனக்கு இன்னும் கொஞ்சகாலத்திற்குப் போதுமான ஜலமும் ஆகாரமுமாவது சேகரித்துக்கொண்டு தன் பிரயாணத்தைத் தொடங்க அனுகூலம் கிடைக்குமல்லவோ.

அன்று காலை வானம் பரிசுத்தமாக விருந்ததோடு காற்று மிக்க வாட்டமாக வீசிக்கொண்டிருந்தபடியால் சுமார் நான்குமணி நேரத்திற்குள் தெப்பம் கரையைக்

கிட்டியது. கரையோரம் எங்கும் கற்பாறைகளாக ஒழுங்கீனமாக விருந்தது. ஒருவிடத்தில் அகன்ற கால்வாய் போல் கடல் சுமார் நூறுகஜதூரம் உட்சென்றிருந்தது.

கிழவன் தெப்பத்தை யங்கு செலுத்திக் கரை யிறங்கி ஒரு கல்லில் தெப்பத்தின் கயிற்றைக்கட்டிவிட்டுப் பூமியில் முழங்காற்படியிட்டு மனதார ஆண்டவனைத் துதித்தான். பத்து நிமிடங்கள் கழிந்தபின் வயோதிகன் கரையிலிருந்து உள் நாட்டை நோக்கிச் சென்றான். கொஞ்சதூரம் சென்றபோது ஒரு குடிசை யவன் கண்களுக்குப் புலப்பட்டது. அதன் எதிரில் ஒரு தீ எரிந்துகொண்டிருந்தது. அதைச்சுற்றி ஐந்தாறுபேர் உட்கார்ந்து கொண்டு ஆகாரம் பொசித்துக்கொண் டிருந்தார்கள். நெடுநாட்களாகத் தன் போன்ற மானிட உருவத்தையே கண்களால் காணாத கிழவனுக்கு அவர்களைச் கண்டதே மிக்க சந்தோஷமுண்டாகி துரிதமாய் அவர்களருகில் நெருங்கினான்.

அச்சனங்கள் நாகரீகமில்லாத காட்டு மிராண்டிகள். ஜலசரத்தின் தோலால் உடையணிந்துகொண் டிருக்கிறார்கள். ஆண் பெண் வித்தியாச மறிவது கஷ்டமாக விருந்தது. ஏனெனில் இருவரும் ஒரேமாதிரி உடையணிந்திருந்தார்கள். அவர்கள் கறுப்பு நிறம்வாய்ந்த குட்டையான உருவமும் தட்டையான நாசியுமுடையவர்கள். முகம் கடுகடுப்பும், குரூரமான பார்வையும் உடையதாக விருந்தது. அவர்கள் உயரமும்,வெண்மை நிறமும்,வெளுத்து நீண்டதாடியும், பரந்த முகமும், கம்பீரத் தோற்றமுமுடைய் நமது வயோதிகனைக்கண்டதே முதலில் அலறிக் கோபமும் பயங்கரமுமான கூச்சலிட்டார்கள். ஒவ்வொருவரும் கையில் நீண்ட அம்பும் வில்லும் வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் போட்ட சத்தத்தைக் கேட்டதே கிழவன் நெஞ்சு கலங்கி நடுக்க முண்டாயிற்று. அடடா கடைசியில் இராக்கதர்போன்ற காட்டுத் துஷ்டமனிதர்களிடமல்லவோ சிக்கிக் கொண்டோம் என்று திகிலடைந்தான். ஆனால் மறுநிமிடம் அம்மனிதர்கள் கிழவனுடைய உருவத்தை யுற்று நோக்கியதும் யாவரும் எழுந்து பயபக்தியோடு கிழவன் எதிரில் முழங்காற் படியிட்டு கைகளாற் சமிக்கைகாட்டி "எங்களை யாசீர்வதித்துக் காப்பாற்றும்" என்று பிரார்த்தித்தார்கள்.

கிழவன் "இம்மனிதர்கள் நம்மைத் தெய்வீகமான புருஷனாக எண்ணிக் கொண்டார்கள்" என்று உணர்ந்து தன் கரங்களை உயரத்தூக்கி ஆண்டவனைத் தோத்தரித்து அவர்கள் சிரங்களின்மேல் கரத்தைவைத்து ஆசீர்வதித்தான். அச்சனங்களின் பீதி யுடனே நீங்கிவிட்டது. அவர்கள் முகத்தில் ஒருவித நிம்மதியும் பயமற்றதுமான குறி தோன்றியது. அவர்கள் அக்கிழவனைப் போசனம்செய்ய வரும்படி குறிப்பாய் அழைத்தார்கள். அவன் அவ்வாறேசென்று அவர்கள் அளித்த ஆகாரத்தையுண்டான். சற்று நேரத்திற்குள் அவர்கள் நிம்மதியான மனதோடிருக்கிறார்களென்றதை யுணர்ந்ததே கிழவன் அவர்களைச் சமிக்கைசெய்து கடற்கரைக்கு அழைத்துச் சென்று தன் தெப்பத்தைக் காட்டி இதன்மேல் ஏறிக்கொண்டு கடலில் நெடுந்தூரத்தி லிருந்து வருகிறேன் என்று சமிக்கைகளால் காட்டினான்.

அச்சனங்கள் அதை யறிந்ததும் வியப்படைந்து அவனை யுற்றுநோக்கினார்கள். அவன் தெய்வீகம் பொருந்தியவன் என்று தாங்கள் கருதியது தவறென்று அவர்களுக்கே இப்போது புலப்பட்டுவிட்டது. ஆயினும் அவன் மேல் கோபங் கொள்ளாது இரக்கமான பார்வையோடு

பார்த்து, "இங்குவா" என்று கடற்கரையின் வேறொரு பாகத்திற்கு அவனை யழைத்துக்கொண்டு போய், அங்கிருந்த அவர்களுடைய நாலைந்து படகுகளை யவனுக்குக் காட்டினார்கள்.

அப்படகுகள் ஒரே அடிமரத்தில் குடையப்பட்ட பெரிய படகுகள். அச்சனங்கள் தங்கள் ஜீவனத்திற்காக கடலில் மீன், சலசரம் முதலியவைகளை வேட்டையாட வேண்டியவர்களாக விருந்தார்கள். அதனால் நாளாவட்டத்தில் தங்கள் படகுகளை ஒழுங்காகவும் பலமாகவும் சீர் திருத்திக் கொள்வதில் பழகிப்பழகி நன்றாய்த் தேர்ந்து விட்டார்கள்.

நமது வயோதிகன் அப்படகுகளைக் கண்டதும் மிக்க சந்தோஷமடைந்து அவர்களை நோக்கிக் கரங்களைக் கூப்பினான். அவர்கள் அக்குறிப்பை யறிந்து கொண்டதால் அவர்களில் தலைவனானவன் அங்கிருந்த படகுகள் எல்லாவற்றிலும் பெரிதான படகைச் சுட்டிக்காட்டி "இதை நீ எடுத்துக் கொள்ளலாம்" என்று சமிக்கையாய்க் கூறினான். கிழவனுக்கு அவர்கள் உதார குணம் மிக்க வியப்பை யுண்டாக்கி விட்டது. ஆகையால் முன்பு அவர்கள் உருவத்தை வெறுப்போடு நோக்கியவன் இப்போது அவர்கள் ஒவ்வொருவரையும் சந்தோஷத்தால் ஆலிங்கனம் செய்து கொண்டான்.

கிழவன் அன்பைக்கண்ட அச்சனங்களின் மனங் கரைந்து விட்டது. கிழவன் அவர்களைத் தெப்பத்தண்டை யழைத்துச் சென்று தான் கொண்டுவந்த தச்சு ஆயுதங்களை யெல்லாம் அவர்களுக்குக் காட்டினான். அவர்கள் அதைக் கண்டவுடனே என்று முணராச் சந்தோஷமடைந்தார்கள். அதோடு கிழவன் "இந்த ஆயுதங்களை யெல்லாம், நான் இதைவிட்டுச் செல்லும் போது, உங்க

ளுக்கே கொடுத்துவிட்டுச் செல்கிறேன் " என்று கூறிய தைக் கேட்டதே அவர்கள் அளவுகடந்த சந்தோஷத் தால் ஆனந்தக் கூத்தாடினார்கள்.

கிழவன் அன்று முதல் தனக்களிக்கப்பட்ட படகை நெடுந்தூர யாத்திரைக்குத் தகுதியதாகச் செய்யத்தொ டங்கினான். அதற்கு ஒரு மேல்தட்டு அமைத்து கீழ்த்தட் டில் தன் ஆகாரம் முதலியவைகளை வைத்துக் கொள்ளும் வண்ணம் அறைகள் வகுத்துக் கொண்டான். சரியான பாய்மரங்கள் அமைத்து மிருகங்களின் சர்மங்களால் பலமான பாய்கள் செய்துகொண்டான்; பலமான சுங் கான் முதலியயாவும் அமைத்துக் கொண்டான். அந்தச் சனங்கள் அவனுக்கு வேண்டிய உதவிகளை யெல்லாம் செய்தார்கள். அதே சமயத்தில் கிழவன் தச்சு ஆயுதங் களைக் கையாடும் மார்க்கங்களை யெல்லாம் அவர்களுக் குக் கற்பித்தான். ஆடவர்கள் வேட்டைக்குச் சென்று பலவகை மிருகங்களையும், மச்சங்கள், ஜலசரங்களையும் கொண்டுவந்தார்கள். மாதர்கள் அவைகளின் மாமிசத்தை நாட்படக் கெடா திருக்கும் வண்ணம் பக்குவம் செய்து கிழவன் கொண்டுவந்த தேங்காய்க் குடுக்கைகளில் நிறப்பினார்கள். ஜலசரத்தின் சர்மத்தால் கிழவனுக்கு ஐந்தாறு ஜதை உடுப்புகள் தயாரித்துக் கொடுத்தார்கள். இவை யனைத்தும் ஆயத்தமாக ஒருமாதமாயிற்று. கிழ வனுக்கு அதுகாறும் நல்ல ஆகாரம் கிடைத்து வந்ததோடு அதிக கஷ்டம் அலைச்சல் முதலிய ஒன்றுமின்றி நல்ல தேக சுகத்தைப் பெற்றுக்கொண்டான்.

கடைசியில் அங்குவந்து கரையிறங்கிய முப்பத்தைந் தாவது நாள் கிழவனுடைய பிரயாணத்திற்கு யாவும் ஆயத்தமாய் விட்டன. கிழவனுடைய நாட்பட்ட பிர யாணத்திற்கு வேண்டிய யாவும் படகில் சேமித்து வைக்

கப்பட்டன. இதற்கிடையில் அத்தீவிலிருந்த அனேகம் ஜனங்கள் இந்த அதிசயமான கிழவனை வந்து வந்து பார்த்திருப்பதால் அவன் புறப்படும் அன்று ஏராளமான ஜனங்கள் வந்து கரையோரத்தில் கூடினார்கள். கிழவன் பிறிவாற்றாது அவர்கள் கண்களில் நீர் துளித்தது. கிழவன் மனமும் மிக்க வேதனை யடைந்து ஒவ்வொருவரையும் ஆலிங்கனம்செய்துகொண்டான். அவன் கண்களிலிருந்து நீர் வடிந்தது. கடைசியில் காலை சுமார் எட்டுமணிக்கு காற்று வாட்டமாக வீசியதால் கிழவன் தன் படகில் ஏறிக்கொண்டு பாய் விரித்தான். இரண்டொரு நிமிடங்களில் படகு கடலில் பிரவேசித்து கிழக்குநோக்கித் துரிதமாகச் செல்லத் தொடங்கியது. கிழவன் காலையிலிருந்து பன்முறை கடவுளைத் துதித்து, இதுவரையில் நம்மைக் காப்பாற்றி இங்குகொண்டுவந்து சேர்த்த கடவுள் நமது ஜன்மதேசம் கொண்டுபோய்ச் சேர்ப்பார் என்ற நம்பகத்தோடு புறப்பட்டான். கரையிலிருந்த சனங்கள் அவன் படகு கண்களுக்கு மறையுமட்டும் பார்த்துக்கொண்டே யிருந்தார்கள்.

42-வது அத்தியாயம்.

வில்வநாதனும் டாக்டர் தங்கவேலுப்பிள்ளையும்—வில்வநாதன் பிறப்பின் மர்மம்—டாக்டர் வெளிதாண்டுதல்-துஷ்டகேது இராஜகுமாரன் இராணி சபையில்—துஷ்டகேதுவுக்கும் இராணிக்கும் நடக்கும் சம்பாஷணை—பயங்கர சங்கதிகள் — இராணியின் நண்பர்கள் கைது செய்யப்படல்.

வில்வநாதன் பூபாலன் வீட்டிற்குச் சென்று பதுமைகளின் அதிசயத்தைக்கண்டுவந்து ஒருமாதமாயிற்று. ஒருநாள் காலை அவன் தன் அறையிலிருக்கும் போது வேலைக்காரன் வந்து "டாக்டர் தங்கவேலுப் பிள்ளை தன் புத்தகசாலையி லிருக்கிறார், உன்னை யவசியம் அங்கு வரச்சொன்னார்" என்றான்.

வில்வநாதன் அவ்வாறே சென்றபோது டாக்டர் ஏதோ ஆழ்ந்த சிந்தனையி லிருந்ததால் திடுக்கிட்டுப் பிறகு சமாளித்துக்கொண்டு "ஆ என் அன்பார்ந்த குழந்தாய் வா. என் அருகில் உட்கார். நாம் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி பேசவேண்டும்" என்றார். வில்வநாதன் மிக்க வியப்புற்று உட்கார்ந்து ஆவலோடு அவர் முகத்தை நோக்கினான்.

டாக்டர்:—"இப்போது உன் பிறப்பின் இரகசியத்தைப் பற்றி கூறப்போகின்றேன். அதன் பிறகு உடனே உன் பெற்றோர் இருக்கும் இடத்திற்குப் புறப்பட வேண்டியதே" என்றார். இதைக்கேட்ட வில்வநாதனுக்குண்டான வியப்பு, சந்தோஷம், மனத்துடிப்பு முதலியவைகளை இதை வாசிப்போரே யூகித்துக் கொள்ளலாகும். "ஓ! இது உண்மையா? என் பெற்

ரோர் உயிரோடிருக்கிருர்களா? எனக்கு அவ்வளவு நற்காலமும் உண்மையாகவேயிருக்கிறதா?'' என்ருன்.

டாக்டர்:—''ஆம் ஆம். ஆத்திரப்படாதே நான் கூறுவது உண்மையான சங்கதியே. சாவதானமாய்க் கேள். நீ ஆத்மநாதம் பிரபுவின் புத்திரியாகிய குசலாம்பாள்மேல் காதல்கொண்டிருக்கும் சங்கதி எனக்குத் தெரியும்'' என்றதே,

வாலிபன் நாணமடைந்து, இச்சங்கதி இவருக்கெப்படித் தெரிந்ததென்று மிக்க வியப்போடு அவரை நோக்கினன்.

டாக்டர்—''அது எனக்குத் தெரியும். அது உன் குற்றமல்ல. கடவுளால் உண்டாக்கப்பட்ட உணர்ச்சியை யாரால் தடுக்கமுடியும். உனக்கு அவள்மேலுண்டான அன்பிற்கு, உனக்குப் புலப்படுவதைவிட சுபாவமான காரணம் வேறுண்டு. அப்படியே குசலாம்பாள் உன்னை விசுவாசிப்பதற்கும் சுபாவமான காரணம் உண்டு'' என்ருர்.

வில்வநாதன்:—தாங்கள் கூறுவதன் கருத்தென்ன? இருவரும் வாலிபமும் அழகுமுடையவர்களாக விருப்பதால் ஒருவரையொருவர் விசுவாசிப்பது சுபாவ உணர்ச்சியென்கிறீர்களோ?

டாக்டர் ''நான் கூறுவது அதல்ல......'' என்று அதற்கப்புறம் தாராளமாய்க் கூறமுடியாமல் தடுமாற்றமுற்ருர். அந்தோ மனமறிந்து பெரும்பொய் கூறப்போவதால் அது வெளிவர அவர் மிக்க கஷ்டப்பட்டு சமாளிக்க வேண்டியிருந்தது. அதற்குள் வாலிபன் ''வேறென்ன காரணம், துரிதமாய்க் கூறிவிடுங்கள். என்மனதை

வேதனையில் விடவேண்டாம்'' என்று மிக்க மனத்துடிப் போடும் ஆவலோடும் கேட்டான்.

டாக்டர்:—'' ஆம்-வேறு காரணமேயிருக்கிறது. அதாவது குசலாம்பாள் உன் சகோதரி. மற்ற விஷயங்களை நீயே யூகித்துக் கொள்ளலாம்'' என்றார்.

இதைக் கேட்டதே வில்வநாதன் ஆசனத்தி லிருந்து துள்ளியெழுந்து "குசலாம்பாள்...குசலாம்...பாள் என் சகோதரியா ?'' என்றான். டாக்டர் "ஆம். ஏனெனில் ஆத்மநாதம் பிரபுவும் அவர் பத்தினியுமே உன் பெற்றோர்கள்'' என்றார். வில்வநாதன் "ஆ! கடவுளே! அப்படியாயின் இனி நான் என் சகோதரியை விட்டுப் பிரியாமல் இருப்பேன். இருவரும் சகோதரர் வாஞ்சையோடு ஒன்றாய்ப் புசிக்கவும், ஒன்றாய் வாசிக்கவும் உலவுமுமாக விருப்போம். இனி என் மனதிலிருக்கும் தீராவேதனையைச் சந்தோஷத்தோடு பொறுத்துக்கொண்டிருப்பேன். ஆ! இந்தப் பாதிச்சங்கிலியின் மர்மம் இப்போது தெரிந்தது'' என்றான்.

டாக்டர்:—" ஆம் ஆம். இந்த இரகசியம் உன் தந்தைக்கும் எனக்கும் மட்டுமே தெரிந்ததாயிருந்தது. நீயும் குசலாம்பாளும் எங்கள் மரணத்திற்குப் பின் சீவித்திருப்பீர்கள். ஆதலால் ஒருசமயம் நீங்கள் உலகில் தற்செயலாகச் சந்தித்தால் இருவரும் மணம்புரிந்து கொள்ளா வண்ணம் எச்சரிக்கை யடைவதற்காகவே அந்த ஏற்பாடுசெய்யப்பட்டது. நீ புண்ணியகோடிப் பிரபுவோடு யுத்தம் செய்த மறுநாள் குசலாம்பாளை அவள் மாளிகைத்தோட்டத்தில் சந்தித்துப் பேசினையல்லவா......'' என்றதே வாலிபன் மிக்க வியப்படைந்து "ஆ! அது எப்படித் தங்களுக்குத் தெரிந்தது ?'' என்றான்.

டாக்டர்:—"அன்று உன்னிட மிருக்கும் அரைச் சங்கிலி யைக் கண்டதும் குசலாம்பாள் தன் சங்கிலியையும் உனக்குக் காட்டியபின் உன்னைப் பிரிந்து ஓடிவிட் டாளல்லவா. அச்சமயம் அவள் தன் தந்தைசொல்லி யிருந்தபடி நடந்து கொண்டாள். அவள் வீட்டிற் குச் சென்றதும் அழுது கொண்டே நடந்தசங்கதி யாவும் தன் தாய்தந்தையிடம் கூறிவிட்டாள்.

உடனே பிரபுவிற்கு உண்மை தெரிந்து விட்டதும் புண்ணியகோடிப் பிரபுவைச் செயித்து ஜெயக்குறியைத் தன் புத்திரிக்களித்தது நீயென்று தெரிந்ததோடு, நீ கள் ளர் கூட்டத்தில் கலந்திருப்பவ னல்லவென்றும் தெரிந் தது. அந்தோ அப்போது தன்புத்திரனைக் காணவேண்டு மென்றும், ஆலிங்கனம் செய்துகொள்ள வேண்டு மென் றும் அவர் மனதிற்பேராவல் உண்டாயிற்று. ஆயினும் அவர் அதை யடக்கிக்கொண் டிருக்கவேண்டியதாயிற்று. அப்போது அவர் பட்ட மனோவேதனை சொல்லிமுடி யாது" என்றபோது வில்வநாதன் அய்யோ என்தந் தையே என்று கண்களில் நீர் பெருக்கினான்.

டாக்டர் "மனதைச் சாந்தப்படுத்திக்கொள். நான் கூறவேண்டிய சங்கதிகள் இன்னுமிருக்கின்றன. பிரபு தன் மனோ வேதனையை யொருவாறு அடக்கிக் கொண்டார். இனி நகரத்தி லிருந்தால் நீயும் குசலாம்பாளும் மறுபடி சந்திக்க நேரிடுமென் றஞ்சியே அடுத்த நாளே இதை விட்டுப் புறப்பட்டு சுமார் ஐம்பது மைல்கள் தூரத்தி லுள்ள, கடலோரத்தி லிருக்கும் தமது நாட்டு மாளிகைக் குக் குடும்பத்தோடு சென்றார்" என்றார்.

வில்வநாதன்:—"ஆனால் குசலாம்பாளுக்கு நான் அவள் சகோதரன் என்றுதெரியாதோ?" என வினவினான்.

டாக்டர்:—"இல்லையில்லை. இப்போது குசலாம்பாளுக்கும் உன் தாய்க்கும் எல்லாச்சங்கதிகளும் தெரியும். பிரபு மிக்க வேதனையோடு இந்த இரகசியத்தை மறைத்து வைத்திருந்தார். ஏனெனில் இதை வெளியிடுவதாயின் தமது குடும்ப சம்பந்தமான ஒரு பயங்கர இரகசியத்தைத் தம்மனைவியிடம் கூறவேண்டிவரும். அப்படிக்கூறின் தம்மனைவியின் மனதிற்கு வியாகூலமுண்டாகுமென்று அஞ்சியே கூருதிருந்தார். ஆனால் அவசியம் கூறவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தது. எப்படியெனின் நாட்டு மாளிகைக்குச் சென்றது முதல் குசலாம்பாள் உன்னைக் காணப் போவதில்லையே என்ற வியாகூலத்தால் மனோவியாதி யுற்று தேகம் மெலிந்து குன்றி கொஞ்சகாலத்தில் பிராணுபத்தே நேரிடக்கூடிய நிலைமை யடைந்துவிட்டாள். அதை யுணர்ந்த உன்தாய் மிக்க வியாகூலமுற்றுள். உன் தந்தை தன்புத்திரிக்கே ஆபத்து நேரிடுமென வஞ்சி இனி யெப்படியானுலும் சரியென்று துணிந்து உன் தாயிடம் கொஞ்சம் கொஞ்சமாய் யாவும் வெளியிட்டு விட்டார்" என்று ஆத்ம நாதம் பிரபுவின் மூதாதையாகிய மூலபுருடன் செய்த கொடும்பாதகத்தையும் அதனுல் நேர்ந்த சாபத்தையும், அதன்படி ஒவ்வொரு மூன்ருவது சந்ததியிலும் பிறக்கும் புத்திரனை அச்சாபம் பற்றுவதையும், அதன்படியே வில்வநாதனுக்குப் பற்றி யிருப்பதையும் ஆகிய எல்லா சங்கதிகளையும் கூறி முடிவில்,

"உன் தங்கைக்கு இச்சாப சங்கதியாவது உனக்கிருக்கும் துக்க சம்பவமாவது கூறப்படவில்லை. நீ தன் சகோதரனென்றும் சில காரணங்களால் இதுகாறும் வெளியில் வளர்க்கப்பட்டு இப்போது குடும்பத்தில் சேர்

த்துக்கொள்ளப் படுகிருயென்றும் மட்டுமே அவள் அறி வாள். அவள் தாய்தந்தையர் சொற்படி நடக்கும் மிக்க அறிவாளி யாகையால், அதற்குமேல் அவர்களை யொன் றும் கேட்கவில்லை. நீ தன் சகோதர னென்றறிந்த சில மணி நேரங்களுக்குள் அவள் வெளுத்த முகத்தில் பிரகாச மும் சந்தோஷமும் மன உற்சாகமும் உண்டாகிவிட்டன. அதன்மேல் பிரபு உனக்கு எல்லாச் சங்கதிகளையும் கூறி நானே நேரில் உன்னையுடனே அழைத்துக் கொண்டு வர வேண்டுமென்று கடிதம் அனுப்பினர். அக்கடிதம் இரவு தான் வந்தது. உன் தாய் தந்தை சகோதரி மூவரும் உன்னை யாலிங்கனம் செய்து கொள்ளப் பேராவலோடு காத்துக்கொண் டிருக்கிறார்கள்; வில்வநாதன் என்பது உன் உண்மை நாமமல்ல. இனி மயூரநாதம் பிரபு என் பதே யுன்பெயராகும். இனி நீ சற்றும் வியாகூல முற்றி ருக்கக் காரணமில்லை. ஆகையால் கடவுளை வாழ்த்திச் சந் தோஷத்தோடிரு " என்றார்.

இவையாவும் கேட்ட வில்வநாதனுக்கு ஓ இப் போது நாம் கேட்டவை யெல்லாம் கனவல்லவே என்று கலவர முண்டாகியதால் சற்று சமாளித்து நிதானித்து உண்மையே யென்றுணர்ந்து மிக்க ஆனந்தங் கொண்டு டாக்டரைத் தழுவிக்கொண்டு, தனக்கு இவையாவும் கூறியதற்காகவும் தன்னை யிதுகாறும் புத்திரவாஞ்சை யோடு ஆதரித்து வந்ததற்காகவும் பன்முறை வந்தன மளித்தான்.

டாக்டர் "குழந்தாய்! நாம் பிரயாணத்திற்குச்செய்ய வேண்டிய அனேகம் ஏற்பாடுக ளிருக்கின்றன. தீபம் வைத்தபின் இரகசியமாகவே நகரைவிட்டு வெளிப்பட வேண்டும். ஏனெனில் சங்கதி தெரிந்தால் என்னைப்போக வொட்டாது தடுக்க முயலக்கூடிய நண்பர்கள் இருக்கிறார்

கள். நாம் நகரைக்கடந்து நெடுந்தூரம் சென்றபின் நாளை க்கு, நான் அவசரநிமித்தம் ஒரு வெளியூருக்குச் சென்ற தாக இராணி முதலியவர்களுக்குச் சமாசாரம் எட்டும்'' என்றார்.

அன்று இரவு சுமார் ஏழுமணிக்கு நான்குபேர் குதிரைகள்மேல் ஏறிக்கொண்டு நகர எல்லையைவிட்டு வடக்கு நோக்கிச்செல்லும் இராஜபாட்டையே சென்றார்கள். அவர்கள் நமது டாக்டர் தங்கவேலுப் பிள்ளையும், வில்வநாதனும் நம்பகமான இரண்டு ஆட்களுமே.

* * * * * * *

மறுநாட்காலை டாக்டர் தங்கவேலுப்பிள்ளை நகரை விட்டு வெளியூருக்குச் சென்றார் என்ற சங்கதி அரண்மனையிலுள்ளவர்களுக்கு எட்டியதே எல்லா விஷயங்களுக்கும் அவருடைய ஆலோசனையையே எதிர்பார்த்திருக்கும் இராணி முதலியவர்களுக்கெல்லாம் மிக்க மனக் கலக்கமுண்டாய்விட்டது. ஆனால் டாக்டர் இவர்கள் துஷ்டகேதுவின் கட்சி பலப்படுவதை யடக்குவதற்காக எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பற்றி தாம் இவர்கட்கனுப்பிய கடிதத்தில் எழுதியிருந்தார். ஆகையால் அவற்றைப்பற்றி ஆலோசிப்பதற்காக இராணி, பத்மநாயகி, புண்ணியகோடிப்பிரபு, சித்திராங்கி, இராஜாங்கக் காரியதரிசியாகிய விக்ரமநாதன் இவர்களனைவரும் இராணியின் அறையில் கூட்டமாகக்கூடி ஆலோசனை செய்யத் தொடங்கினார்கள்.

அச்சமயம் ஒரு வேலைக்காரன் வந்து இராணியை நோக்கி "மகாராணி! துஷ்டகேது இராஜகுமாரர் வந்திருக்கிறார். ஏதோ ஒரு முக்கிய விஷயமாகத் தங்களைக் கண்டு பேசவேண்டுமாம்" என்றான். இராணி "ஆ! எனது நண்பர்கள் என்னைச் சூழ்ந்திருக்கும் சமயத்தில்

வந்ததே நல்லதாயிற்று'' என்று கூறிக்கொண்டே காரிய தரிசியை நோக்கி "பிரபுவே அவரோடு பேசலாம் என்று கருதுகிறீர்களா? உமது அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டாள்.

விக்ரமநாதன்:—"துஷ்டகேது இராஜகுமாரர் இங்கு வந்தது அருமையே. ஆதலின் அவருக்குப் பேட்டி கொடுக்கவேண்டியதென்றே எனக்குப் புலப்படுகிறது'' என்றான்.

அதன்மேல் அவரை யுள்ளே விடு என்று இராணி கட்டளை யிட்டுவிட்டுத் தன் நண்பர்களை நோக்கி "அவர் வருவதால் நன்மையொன்றும் இல்லை யென்றே எனக்குப் புலப்படுகிறது'' என்று கூறினாள்.

புண்ணியகோடிப் பிரபு அவன் வருவதைப்பற்றி வெறுப்படைந்து "துஷ்டகேது இராஜகுமாரர் தங்களோடு சமாதானம் செய்துகொள்ள வருகிறார் என்று கருதுகிறேன்'' என்றான். இராணி அது மிகக்கஷ்டமான காரியம்'' என்றாள். இதற்குள் துஷ்டகேது வரும் காலடிச் சத்தம் கேட்டது. அவன் உள்ளே வந்ததும், அவன் இராஜகுமாரனுவதோடு, இராணிக்குச் சந்ததியில்லாவிட்டால் அவளுக்குப்பின் பட்டத்திற்குச் சுதந்திரமுடையவனாதலால் இராணி தவிர மற்ற அனைவரும் எழுந்து நின்றார்கள்.

துஷ்டகேது இராணிக்கு வந்தனமளித்துவிட்டு ஆசனத்திலமர்ந்ததும் இராணியை நோக்கி "நான் இரண்டொரு நிமிடங்கள் தங்களோடு தனியே வார்த்தையாட அனுமதி யளிக்கிறீர்களா?'' என்றான். இராணி "இங்கிருப்பவர்களனைவரும் நமது மனமொத்த நண்பர்களே ஆதலால் அவர்களை நீக்கிப் பேசுவது அவர்கள் நட்பிற்கு அகௌரவத்தை யுண்டாக்கும்'' என்றாள்.

துஷ்டகேது:—தங்கள் பிரியம். அவ்வாருயின் நான் கூறப் போகும் விஷயம் எனக்கு அவமானத்தை யுண்டாக் கத்தக்கதல்ல. ஆதலின் இவர்கள் முன்னிலையிலேயே கூறுகிறேன். முதலில் ஒரு விஷயம் தங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். அதாவது இராஜ்ஜி யம் முழுமையும் உண்டாகி யிருக்கும் குழப்பம், குடிகளுக்குள் உண்டாகி யிருக்கும் அதிருப்தியும் வெறுப்பும், பிரபுக்களின் தாஹங்காரம், சட்ட விரோதமான நடக்கைகளையுடைய......" என்ப தற்குள்,

இராணி:—"சட்ட விரோத நடக்கைகளையுடைய கள்ளர் கூட்டம். நீர்கூட அவர்கள் கூட்டாளி யென்று கேள்விப்பட்டேன். நீர் இப்போது நமக்கு ஆலோ சனை யல்லது புத்திமதி கூறவே இங்கு வந்ததாயின் உம்மிடமிருந்து நாம் கேட்டுக்கொள்ளத்தக்க புத்தி மதி யொன்றுமில்லை." என்ருள்.

துஷ்டகேது ஒருவித வெறுப்பான புன்னகையோடு "நான் பட்டத்திற்குச் சுதந்திரக்காரனுனதால் என் ஆலோசனையை நிராகரிக்கலாகா தென்பதைத் தாங்கள் கருதவில்லைபோலும். ஆயினும் அதைப்பற்றி நான் இப் போது பேசவேண்டிய அவசியமில்லை. இப்போது நான் வந்தது சமாதானத்தை யுண்டாக்கவே யன்றி இருக்கிற மனஸ்தாபத்தை யதிகமாக்கவல்ல. இப்போதிருக்கும் மனஸ்தாபங்கள் நீங்க ஒரேயொரு வழி யிருக்கிறதென் பதே நமது நாட்டாருடைய ஏகோபித்த அபிப்பிரா யம்" என்றதே,

இராணி "இப்போது நீர் நமது நாட்டாரனைவர்களின் பிரதிநிதியாகப் பேசவந்ததாயின் உமது வார்த்தைகளை நாம் அலட்சியமாகக் கருதமாட்டோம். ஆனல் நீர் அம்

மாதிரி ஜனங்களனைவரின் பிரதிநிதியாக வந்ததென்பதற்கு இதைவிடத் தக்க அத்தாட்சி வேண்டும். அது இல்லாத வரையில் நமது சம்பாஷணையை யுடனே முடித்துவிட வேண்டுமென்பதே நமது விருப்பம்'' என்றாள்.

துஷ்டகேது:—மகாராணி! நீ என்னை அலட்சியமாகவும் அவமரியாதையாகவுமே நடத்துகிறாய். ஆயினும் பரவாயில்லை. இங்கிருக்கப்பட்டவர்கள் உம்முடைய உண்மைச் சினேகிதர்களாக விருந்தால் இப்போது நாட்டில் நிகழும் பயங்கர சம்பவங்களை யும்மிடம் கூறியே யிருப்பார்கள். அதாவது, எந்த நிமிடமோ கலகம் கிளம்பிவிடும்போ லிருக்கிறது; அன்னியநாட்டார் படையெடுத்துவரப் போகிறார்கள். உள்நாட்டுக் கலகம் கிளம்பாவண்ணம் அடக்கிவிடவும், அன்னிய நாட்டார் படையெடுத்து வராதபடி தடுக்கவும் வேண்டுமாயின் அதற்கு இப்போது மனஸ்தாபத்தி லிருக்கும் இருகட்சிகளும் ஒருமித்துவிடவேண்டிய ஒரு மார்க்கமே இருக்கிறது'' என்றான்.

புண்ணியகோடிப்பிரபு உடனே தன் உடைவாளின் கைப்பிடியைப்பற்றிக்கொண்டு தட்டென்றெழுந்து "இராணியின் எதிரில் கலகம் என்று கூறத்துணிந்தவர்கள் யார்?'' என்றான். துஷ்டகேது, "கொஞ்சம் பெறுமையாயிரும். இராணியின் முன்வந்து கலகம் நடக்கப்போகிறதென்று எச்சரிக்கை செய்வோர் கலகக்காரரல்ல. ஆனல் இராணிக்குத் தம் சுயகாரியத்தைக் கருதி துர்ப்புத்தி போதிப்போரும் தீயநெறிகளுக்கு வழிகாட்டுவோருமே சண்டாளத் துரோகிகள் என்று கூறுகிறேன்'' என்றான்.

புண்ணியகோடிப்பிரபு கோபத்தோடு "நீர் கூறுவதென்ன? துர்ப்போதனை செய்பவர்களில் நான் ஒருவனென்று கூறுகிறீர்?'' என்றான்.

பத்மநாயகி கண்களில் கோபத்தணல் வீச "இது நம் மணவரைச் சுட்டியுமே கூறப்பட்டது. இக்குற்றம் மன்னிக்கத்தகாதது" என்றாள்.

இராணி "பொறுங்கள் பொறுங்கள் என் எதிரில் யாரும் உங்களை யவமரியாதையாய்ப் பேசும்படிவிடமாட்டேன். நமது பிரபுவிற்கு நான் விடை பகருகிறேன்" என்று கூறிவிட்டுத் துஷ்டகேதுவை நோக்கி,

"நீர் நாட்டில் கலகம் உண்டாகும் என்கிறீர். அத்தகைய அச்சம் கொஞ்சமேனு மில்லையென்று நான் கூறுகிறேன். வெளி நாட்டார் படையெடுத்துவரப்போகிறார்கள் என்றீரே, அதன் விபரமென்ன கூறும்" என்றாள்.

துஷ்டகேது:—"ஒருமணி நேரத்திற்கு முன்புதான் புஷ்பகிரியிலிருந்து ஒரு ஆள் என்னிடம் வந்தான். அவன் அங்நாட்டில் நடக்கும் சங்கதியை ஆலசியமின்றி யெனக்குக் கூறுவதற்காக இரவு பகலாய் ஓடிவந்திருக்கிறான். அங்நாட்டினரசனாகிய சித்ரசேன மகாராஜன் நமது இராஜ்ஜியத்தின்மேல் படையெடுப்பதற்காக ஒரு பலமான சேனையைத் திரட்டி யிருக்கிறான். அச்சேனைக்கு பிரக்யாதிபெற்ற மகாவீரனாகிய சத்தியவீரப் பிரபுவைச் சேனாதிபதியாக அமர்த்தி யிருக்கிறான். அச்சேனைக்கு இரண்டாவது சேனாதிபதியாக அமர்த்தப்பட்டிருக்கும் வீரன் இங்கிருப்பவர்களுக்குத் தெரியாதவனல்ல" என்றான்.

இச்சங்கதியைக் கூறத் தொடங்கியதே அனைவரும் பிரமிப்படைந்து இமை கொட்டாது மிக்க ஆவலோடு அவன் முகத்தையே நோக்கிக்கொண் டிருந்தார்கள். துஷ்டகேது "ஆம். இச்சங்கதிதான் அந்த ஆள்கூறினான்.

இது உண்மையென்பதில் எள்ளளவும் அய்யமில்லை. அச்சேனையின் படைத்தலைவனாகிய சத்தியவீரப் பிரபு என்பவன் கள்ளத்தலைவன் என்று யாவரும் கருதியிருந்த மாயசிங்கனேயாகும். இரண்டாவது சேனாதிபதி இராணியின் சமுகத்தி லிருந்த இராகவவீரனே.'' என்றான்.

இச்சங்கதியைக்கேட்டதே யாவரும் திகிலும் வியப்புமடைந்தார்கள் பத்மநாயகிக்குத் தன் புதல்வன் க்ஷேமமாக விருப்பதையறியச் சந்தோஷமாகவும், அவன் விரோதியாகத் திரும்பி விட்டதைப்பற்றி வியப்பும் துயரமுமாகவும் இருந்தது. இராணி "இராகவ வீரனாவது துரோகியாகவும் கலகக்காரனாகவும் திரும்பிவிடுவதாவது! ஒருபோதுமிராது'' என்றாள். ஆனால் மறுவிநாடியே அன்று இராகவன் தன்னைக்கொல்ல முயன்றதும், மாயசிங்கன்வந்து அவனைப் பிடித்துக் கொண்டு போனதுமாகிய விஷயங்களை நினைத்ததும் மனச்சோர் வடைந்து "ஆம் ஆம் இருக்கலாம் இருக்கலாம்'' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டாள்.

துஷ்டகேது "இப்போது நான் கூறுவதுயாவும் உண்மையேயென்று தங்களுக்கு விளங்குமென்று நம்புகிறேன். உள்நாட்டில் கலகம், வெளியிலிருந்து படையெடுப்பு. இந்த ஆபத்துகளால் தங்கள் சிங்காதனமே அபாயமான நிலைமையி லிருக்கிறது. இப்போது இவற்றினின்று தப்பவேண்டு மாயின் நாம் இருகட்சியாரும் ஒன்று சேர்ந்துவிட வேண்டும். பலம் பொருந்திய ஆட்கள் தங்களுக் குதவியா யிருக்கவேண்டும். ஒற்றுமையடைந்து விட்டால் நம்மைவெல்ல முடியாது. தனித்தனியா யிருந்தால் சுலபமா யழிக்கப்படுவோம். ஆகையால் நான் கூறும் ஆலோசனையாவது பாரபட்ச மில்லாத பொதுவான நண்பர்கள் கூறுகிறபடி நாம் இருவரும்

மணம்புரிந்து கொள்ள வேண்டுமென்பதே" என்று சாந்தமாகக் கூறினன்.

இம்மொழிகளைக் கேட்ட இராணி கோபத்தால் கண்கள் சிவந்து எழுந்து நின்று ஒருகாலும் உதவாது. நீ என் விரோதி. ஒருபோதும் எனக்குச் சினேகனுகாய். நீ என்னை யவமானப் படுத்தப் பகிரங்கத்தில் வந்து யுத்தம் செய்தவன். எனக்குக் கெடுதிசெய்தவன். உன்னை யொரு போதும் நண்பனுக மதியேன். நான் உன்னை இலட்சியம் செய்யமாட்டேன். உனக்கு மரியாதைசெய்யமாட்டேன். உன்னை யடியோடு அவமதிக்கிறேன். வெறுக்கிறேன். ஓ துஷ்டகேதுப் பிரபுவே, நான் சினேகர்கள் உதவியில்லாதவளென்று நினைக்காதே, போ" என்று வாயிற்படியைச் சுட்டிக்காட்டினுள்.

அரசி அவ்வளவு கடுஞ்சினத்தோடு அவனை யலட்சியமாகப் பேசியதைக் கண்ட புண்ணிய கோடிப் பிரபு, சித்திராங்கி, பத்மநாயகி மூவரும் மிக்க சந்தோஷமடைந்தார்கள். காரியதரிசி மட்டும் தனக்குள் துயரமடைந்தான். துஷ்டகேது தட்டென்று எழுந்து நின்று இராணியைச் சூழ்ந்திருப்போரை யலட்சியமான பார்வையாக நோக்கிவிட்டு, பிறகு இராணியை உற்று நோக்கி உறுதியான வார்த்தைகளால்,

"ஓ அகங்காரங் கொண்ட இராணியே! ஒரே வார்த்தை, நீ உனக்கு நண்பருளரெனப் பெருமையாகக் கூறினை. இன்னும் ஒரு நாழிகையில் உனக்கு ஒரு நண்பர் கூட இராமற் போவார்கள். நான் கூறிய சமாதான மொழியை நிராகரித்து என்னை அவமரியாதையாய்ப் பேசினை. சண்டையே சம்மதம் என்ருய் - சரி அப்படியே யிருக்கட்டும். ஆனல் மறுமுறை சமாதானத்திற்குக் கெஞ்சப்போவது நீயே யென்று நினைத்துக்கொள்" என்ருன்.

இராணியின் பக்கத்திலிருந்த புண்ணியகோடிப் பிரபு கோபாவேசத்தோடெழுந்து தன் வாளையுருவிக்கொண்டு "இது மகா துஷ்டத்தனம். இவனைக் கொல்லாமல் விடக் கூடாது" என்று துஷ்டகேதுமேல் பாயப்போனான். இராணி "பிரபுவே பொறுமையா யிருக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறேன்" என்று கூறிக்கொண்டே அவன் கரத்தைப் பற்றினாள். அதன்மேல் அவன் "இராணியின் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறேன். ஆனால் அவனைத் தண்டிக்கவே வேண்டுமென்பதே என் விருப்பம்" என்றான்.

துஷ்டகேது மேல் கண்டவாறு கூறியதும் புண்ணியகோடிப்பிரபுவை, "சீ! உன்துள்ளல் அடங்கும் வேளை நெறுங்கிவிட்டது. நீயொரு துரும்புக்குச்சமம்" என்றுகூறுவதுபோல், அலட்சியமாக நோக்கிவிட்டு அங்கிருந்து வெளிப்பட்டான். இரண்டு மூன்று நிமிடங்கள் ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. யாவர் மனதிலும் கலவரமும் பீதியு முண்டாயிற்று. அங்க நாட்டுச் சேனை, சண்டைக்கு வருகிறதென்ற சங்கதியைப்பற்றி சந்தேகிக்க வழியில்லை.

கடைசியில் இராணி தன் காரியதரிசியாகிய விக்ரமநாதனை நோக்கி "பிரபுவே! ஒரு விநாடிகூட ஆலசியம் செய்யலாகாது. உடனே அங்கநாட்டரசனாகிய சித்திரசேன மகாராசனுக்கு மிக்க சினேக வாஞ்சையோடு ஒரு கடிதம் வரைந்து அவன் நமது இராஜ்ஜியத்தின்மேல் சண்டைக்குச் சேனைகளை யனுப்பா வண்ணம் செய்யவேண்டும்" என்றாள். காரியதரிசி அவ்வாறே இதோ எழுதிக்கொண்டு வருகிறேன் என்று கூறி அறையை விட்டுச் சென்றார்.

இராணி "ஆ! இப்போது டாக்டரின் ஆலோசனை நமக்கு அவசியம் வேண்டும். அவர் சமையத்தில் போய்

விட்டாரே!" என்ருள். புண்ணியகோடிப்பிரபு "ஏன்! ஆட்களை யனுப்பி அவரை வழிமறித்து அழைத்துவரச் செய்யலாமே" என்ருன். இராணி "அவர் எழுதிய கடிதத்தில் தான் எங்கு செல்வதென்றும், எத்திக்கை நோக்கிச் செல்வதென்றும் கண்டிருக்க வில்லையே" என் றதும், ஏதோ சத்தத்தை உற்றுக்கேட்டு "ஆ ஏதோ பலத்தகாலடிகள் அறையை நோக்கிவருவதுபோல் காண் கிறது" என்ருள்.

பத்மநாயகி கலவரமடைந்த முகத்தோடு துள்ளியெ ழுந்து "ஆம் ஆம். ஆயுதங்களின் சத்தம்கூடக் கேட் கிறது." என்ருள். இராணி "என்ன சங்கதி? ஒன்றும் விளங்கவில்லையே" என்ருள். யாவரும் ஒரு விதப் பீதி யோடு வாயிற்படியை நோக்கினர்கள்.

மறுகிமிடம் அறையின் கதவு திறக்கப்பட்டதும் பூரண ஆயுதமணிந்த வல்லமைசாலிகளாகிய பனிரண்டு போர்வீரர்கள் ஒரு உத்தியோகஸ்தனேடு அறைக்குள் நுழைந்தார்கள். புண்ணியகோடிப் பிரபு "ஆ! கலகம் ஆரம்பமாகிவிட்டது" என்று தன் வாளைக் கரத்தில்பற்றி ஞன்.

போர்வீரர்களின் தலைவன் "பிரபுவே! நாங்கள் கல கக்காரர்களல்ல. மகாராணி! நாங்கள் இவ்வாறு முன் அறிக்கையின்றி வந்ததற்காக எங்களை மன்னிக்கச்சோரு கிறேன்" என்ருன். இராணி "இவ்வாறு வந்த காரண மென்ன?" என்ருள்.

உத்தியோகஸ்தன்:— நாங்கள் பத்மநாயகிச் சீமாட்டி, புண்ணியகோடிப்பிரபு முதலியவர்களைக் கைது செய்துக்கொண்டு போக வந்திருக்கிறேம்.

இராணி கோபத்தோடு "என்ன? என் நண்பர்க ளையா? என்னிடம் இராஜவிசுவாசங்கொண்டுள்ள என் நம்

பிக்கையான சிநேகரைக் கைது செய்வதா?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள்.

உத்தியோகஸ்தன்:—"இவர்களை மட்டுமல்ல சித்ராங்கிச் சீமாட்டி, டாக்டர் தங்கவேலுப் பிள்ளை, காரியதரிசியாகிய விக்ரமநாதம் பிரபு இவர்களைக் கூடச் சிறைப்படுத்த உத்திரவு பிறந்திருக்கிறது. இவர்களில் டாக்டர் இரவு எங்கோ ஓடிவிட்டார். காரியதரிசி முன்னமே சிறையாக்கப் பட்டார்" என்றான்.

இராணி "யாருடைய உத்திரவின்மேல்?" என்றாள். உத்தியோகஸ்தன் ஜகத்குருஸ்வாமிகள் நமது நாட்டுப் பிரதமகுருவிற் கனுப்பியுள்ள கட்டளைப்படி" என்றான். இராணி திகிலோடு "என்ன குற்றத்திற்காக இவர்கள் கைதுசெய்யப்படுவது?" என்றாள். அதற்கு அப்போர் வீரத்தலைவன் "அமரநாதம் பிரபு என்ற இராஜகுமாரரைக் கொலைசெய்ததற்காக" என்றான். இம்மொழிகளைக் கேட்டதே இராணி ஆவென்றலறி அடியற்ற மரம் போல் பூமியில் வீழ்ந்து மூர்ச்சை யடைந்தாள். சித்ராங்கியும் புண்ணியகோடிப் பிரபுவும் திகைத்து நின்றார்கள்.

பத்மநாயகி தைரியத்தோடு போர்வீரரை நோக்கி "பார்த்தீர்களா உங்களுடைய தகாத நடக்கையினால் விளைந்த பயனை? இராணி யிருக்கும் இந்தவிடம் மிக்க மரியாதைக் குரியஸ்தலம், போங்கள். போய்விடுங்கள்" என்று கையைவீசி வாயிற்படியைச் சுட்டிக்காட்டினாள்.

உத்தியோகஸ்தன் "ஜகத்குருவின் கட்டளைக்கு முன் எதுவும் மரியாதைக்குரிய இடமாகாது. நாங்கள் எங்கள் கட்டளையை நிறைவேற்றிக் கொண்டுதான் செல்வோம்" என்றான். புண்ணியகோடிப் பிரபு தன் வாளை யுருவிக்கொண்டு "ஒருகாலும் முடியாது" என்று கூறிக் கொண்டே அந்த உத்தியோகஸ்தன்மேல் பாய்ந்தான்.

மறுநிமிடம் அவன் நிராயுத னாக்கப்பட்டு பிடித்துக் கொள்ளப் பட்டான். அதே நிமிடம் பத்மநாயகியும் சித்ராங்கியும் கூட வீரர்களால் பிடித்துக் கொள்ளப் பட்டார்கள். இவர்களிருவரும் போட்டக் கூச்சலால் இராணி கண்களைத் திறந்து பார்த்தாள். தன் சோரநாயகனும் நண்பர்களாகிய மாதர் இருவரும் போர் வீரர்களால் பிடித்து இழுத்துக்கொண்டு போகப் படுவதைக் கண்டதும் ஆவிசோர்ந்து மறுபடி சவம்போல் வீழ்ந்து விட்டாள். இரண்டொரு நிமிடங்களில் பிடிக்கப்பட்ட மூவரும் வீதியில் ஆயத்தமாய்க் காத்துக்கொண் டிருந்த இரண்டு வண்டிகளிலும் ஏற்றிக்கொண்டு போகப்பட்டார்கள். அவற்றில் ஒரு வண்டியில் காரியதரிசி உட்காரவைக் கப்பட் டிருப்பதைக் கண்டதும், அவர் முன்னமே சிறையாக்கப்பட்டா ரென்று உத்தியோகஸ்தன் முன்புகூறியதை நினைந்து ஆவிசோர்ந்தார்கள்.

நடந்த சங்கதிகளை யறிந்த அரண்மனை யாட்களனைவரும் பெருங்கலக்க முற்றனர். தோழிகள் இராணியை யெடுத்துப்போய் உபசாரம் செய்யத் தொடங்கினார்கள்.

43-வது அத்தியாயம்.

நீதிச்சபையில் விசாரணை—துஷ்டகேதுவின் தந்திர வேலை—சாட்சிகள் விசாரணை—குற்றவாளிகள் குற்றத்தை மறுத்தல்.

முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள்நடந்த மறுநாள் பகல் பதினொருமணிக்கு நகரநீதிச் சபையில் ஜனக்கூட்டம் மிக்க அதிகமாக விருந்தது. இராணியின் அரண்மனையிலுள்ள முக்கியமான ஆட்கள் இரா

ணியின் கணவனைக் கொன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட் டிருக்கிறார்கள் என்று எங்கும் வதந்தியுண்டானதால் அத் தகைய ஜனக்கூட்டம் அங்குகூடியது.

சரியாகப் பனிரண்டடிக்கும் சமயம் பிரதம நியா யாதிபதி ஆசனத்தில்வந் தமர்ந்தார். உடனே அங்கு முன்பேவந் தமர்ந்திருந்த உத்தியோகஸ்தர்களும் பின் னால் நின்றிருந்த காவல்வீரர்களும் அனைவரும் எழுந்து நின்று வந்தனமளித்தார்கள். இரண்டொரு நிமிடங்களுக் குள் காவலர்கள் கைதிகளை நீதிச்சபையிற் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அவர்களெல்லாம் விலங்குகள் பூட்டப் பட்டிருந்தார்கள்.

அதேசமயம் நியாயசபையின் பிரதமகாவலன் "மிக்க சங்கைக்குரிய சிரேஷ்ட குருசுவாமிகளுக்கு வழிவிடுங் கள்" என்று கூவினான். ஏனெனில் அப்போதுதான் அந்த இராஜ்ஜியத்தின் சிரேஷ்டகுரு நியாயசபைக்குள் நுழைந்தார். அவருடைய செங்கோலை யேந்திக்கொண்டு இன்னொரு குரு அவர் பக்கத்தில் வந்தார். அவர்பின்னால் சுமார் பத்து பனிரண்டு கீழ்த்தர குருமார்கள் வந்தார்கள். பிரதம நியாயாதிபதி யவரைக்கண்டதும் எழுந்து நின்று மிக்க வணக்கத்தோடு அவருக்கு நமஸ்காரம் செய்தார்.

அவர் வருகையைக் கண்ட ஜனங்களனைவரும் வியப் பும் அச்சமும் கொண்டு அவரையே நோக்கினவர்களாக விருந்தார்கள். ஒருவரும் வேறெந்த விஷயத்தையும் கவ னிக்கவில்லை. அச்சமயம் வரிசையாய் நிற்கும் குற்றவாளி களில் இராஜாங்கக் காரியதரிசி யாகிய விக்ரமநாதன், யாரோ பின்னாலிருந்து தன் சட்டையைப் பிடித்திழுப்பது போல் தோன்றியதால், திரும்பிப்பார்த்தான். அவ்வாறு அவனை யிழுத்தவன் துஷ்டகேது இராஜகுமாரன். அவன் அங்கிருந்த கம்பத்தின் மறைவில் நின்றிருந்தான்.

துஷ்டகேது விக்ரமநாதனிடம் இரகசியமாக "ஜகத் குருவின் கட்டளையில் நீகூடச் சேர்க்கப்பட் டிருக்கிருய். அமரநாதன் கொல்லப்பட்ட சமயம் நீ அரண்மனையில் இல்லாவிட்டாலும் அக்கொலையில் நீ சம்பந்தப்பட் டிருக் கிருயென்று ருசுப்படுத்தச் சமயோசிதமான சாட்சியம் இருக்கிறது" என்ருன்.

காரியதரிசி பீதியடைந்து "பிரபுவே! கடவுளறிய நான் நிரபராதி" என்ருன். துஷ்டகேது "அப்படியா யின் நீ மற்ற குற்றவாளிகளின்மேல் குற்றம் ருசுவாகும் வண்ணம் சாக்ஷிகூறினல் தப்பித்துக் கொள்ளலாம். நீ அப்படிச்செய்தால் உன் உத்தியோகத்திற்குக் கூட ஒரு கெடுதியும் நேரிடாவண்ணம் நான் பாதுகாப்பதாய் சத் தியவாக் களிக்கிறேன்" என்ருன்.

காரியதரிசி "பிரபுவே! நான் அவ்வாறே செய்யச் சித்தமாக விருக்கிறேன்" என்ருன்.

துஷ்டகேது "சரி. அதுதான் நலம். சமயம்வரும் போது தாங்கள் துணிகரமாய் முன்னின்று குற்றவாளிக ளின் குற்றத்தை ருசுப்படுத்தத்தக்க சாக்ஷியம் கூறவேண் டும். ஆனல் ஒன்றுமட்டும் நினைவிலிருக்கட்டும். அதாவது இராணியின்மேல் குற்றம் ஏற்படும்படி ஒன்றும் கூறக் கூடாது; ஆனல் இராணி நிரபராதி யென்றும் ருசுப்படுத் தக்கூடாது. ஜகத்குருவின் பிரியம் அவ்வாறிருக்கிறது" என்ருன்.

காரியதரிசி அப்படியே என்றதும், துஷ்டகேது அந்த விடத்தைவிட்டுப் போய்விட்டான். மற்ற குற்ற வாளிகள் முதல் அனைவரும் அச்சமயம் பிரதம குரு வையே நோக்கிக்கொண் டிருந்தபடியால், இவர்கள் சம் பாஷணையை யொருவரும் கவனிக்கவில்லை. பிரதம குரு தம் பரிவாரம் தம்மைச் சூழ்ந்து நிற்க நீதவான் முன்னர்

வந்ததும் நின்று தமது கரத்தில் வைத்திருந்த கடிதத்தை யவர்முன் நீட்டித் தாம்வந்த சங்கதியைக் கூறினர். அதை யீண்டு சுருக்கமாகக் கூறுகிறேம்.

"நியாயாதிபதியே! மிக்க வணக்கத்திற் குறிய ஜகத் குருவான சுவாமிகள், இந்த இராஜ்ஜியத்திலுள்ள சிலர் செய்த குற்றத்திற்காக அவர்களை நீதிச்சபையில் விசாரணை செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி அவருடைய ஊழியர்களில் ஒருவனுகிய என்னைத் தமது பிரதிநிதியாக அமர்த்தியிருக்கிறர். அதோடு அக்குற்றவாளிகளை விசாரித்து குற்றம் நியாயப்படி ருசுவாக்கப்படின் அவர்களுக்குத் தக்க தண்டனை விதிக்கவும், ருசுவாகாவிடின் அவர்களை விடுதலைசெய்யவும் உமக்குப் பூரண அதிகாரத்தையும் பொறுப்பையும் அளித்திருக்கிறர். இதில் பூரணமான நீதி செலுத்தப்பட வேண்டுமென்று கட்டளையிட் டிருக்கிறர். அவர் கட்டளைப்படி குற்றம் சாட்டப்பட்ட ஆட்கள் இராணியிடம் நண்பர்களாகவும் ஆலோசனைக்காரர்களாவும் இருக்கும் பத்மநாயகிச் சீமாட்டி 1. சித்ராங்கி என்ற தோழி 2. புண்ணிய கோடிப்பிரபு 3. பிரதம அரண்மனை வைத்தியராகிய டாக்டர் தங்கவேலுப்பிள்ளை 4. இராஜாங்க காரியதரிசியாகிய விக்ரமநாதம் பிரபு 5. ஆகிய இந்த ஐவர்களே யாவர். இவர்கள் மேல் சாட்டப்பட்ட குற்றமாவது, இவர்கள் இராணியின் கணவரும் ஸ்ரீ ஜகத்குரு சுவாமிகள் கட்டளைப்படி நம்மால் இந்த நாட்டிற்கு அரசராக முடி சூட்டப்பட்டவருமாகிய அமரநாத இராஜகுமாரரை அக்கிரமமாகவும் குரூரமாகவும் கொலை செய்தார்கள் என்றதேயாகும்." என்ருர்.

குரு இவ்வாறு கூறியதும் நியாயாதிபதி "சுவாமிகளே! ஜகத்குரு சுவாமிகளின் கட்டளைப்படி அடியேன்

இப்பொறுப்பை யேற்றுக்கொண்டு நீதிப்படி விசாரணை செய்து முழு நீதி செலுத்துவதாகச் சத்தியம் செய்கிறேன்'' என்று கூறிக்கொண்டு குரு அளித்த கட்டளையைப் பெற்றுக் கொண்டார். அதன் பிறகு தமது பரிவாரத்தோடு மெதுவாக அங்கிருந்து சென்றார்.

பத்மநாயகிச் சீமாட்டி சற்று தைரியத்தோடு நிமிர்ந்து நின்று நியாயாதிபதியை நோக்கி விலங்கிட்ட இருகரங்களையும் நீட்டிக்கொண்டு, "நியாயாதிபதி யவர்கள் அடியேன் மேல் தயைபுரிந்து முன்னடி நான் கூறும் இரண்டொரு மொழிகளை மட்டும் செவியேற்கும்படி மிகவும் வேண்டிக் கொள்கிறேன். அதாவது நாங்கள் அரண்மனையில் மகாராணியின் அறையிலிருந்தோம். இராணியின் முன் இருந்த எங்களைச் சிறைப்படுத்திக் கொண்டு வந்தார்கள். இராணியின் வாசஸ்தலம் மரியாதைக் குரிய ஸ்தலமானதால் போர்வீரர் எங்களைச் சிறை செய்தது சட்டத்திற்கு மாறான நடக்கையாகும். ஆதலின் எங்களை விடுதலை செய்யும்படி பிரார்த்திக்கிறேன்'' என்று மொழிந்தாள்.

நியாயாதிபதி "சீமாட்டியே! ஜகத்குரு சுவாமிகளின் கட்டளைக்கு மேலான கட்டளை யெதுவுமில்லை. அதற்குள்ள மரியாதைக்கு மேலான மரியாதை யெதற்குமில்லையாதலால் நீ கூறும் ஆக்ஷேபனை கவனிக்கத்தக்கதல்ல'' என்றார்.

அதன் பிறகு நியாயாதிபதி இராணுவ உத்தியோகஸ்தனை நோக்கி "இக்குற்றச் சாட்டில் குறிக்கப் பட்டிருக்கும் ஆசாமிகள் அனைவரையும் கைது செய்துக் கொண்டு வந்திருக்கின்றீரா?'' என்றார்.

உத்தியோகஸ்தன்:—டாக்டர் தங்கவேலுப்பிள்ளை தவிர மற்ற அனைவரையும் பிடித்து வந்திருக்கிறோம்.

அந்த டாக்டர் கடந்த இரவு கள்ளத்தனமாய் ஊரை விட்டோடிப் போய் விட்டதாகத் தெரிகிறது'' என்றான்.

நியாயாதிபதி ''இவர்கள் மேல் இக்குற்றத்தைச் சாட்ட முன் வருவது யார்?'' என்றதே, துஷ்டகேது இராஜகுமாரன் நான்றான் என்று கூறிக்கொண்டே நியாயாதிபதி முன் நின்றான். அதைக்கண்ட பத்ம நாயகி மிக்க கோபத்தோடு தன் பக்கத்திலிருந்த மற்ற குற்றவாளிகளை நோக்கி 'ஆ! நான் அப்படித்தான் கருதினேன்'' என்றாள்.

நியாயாதிபதி துஷ்டகேதுவை நோக்கி, ''பிரபுவே! இவர்கள் அனைவர் மேலும் குற்றம் சாற்றுகிறீர்களோ?'' என்றார். துஷ்டகேது ''காரியதரிசியாகிய விக்ரம நாதப் பிரபு தவிர மற்றவர்கள் அனைவர்மேலும் குற்றம் சாட்டுகிறேன். இவர் எவ்விதத்தாலும் அக்கொலைக்கு உடந்தையாக இருந்திருக்க வில்லை யென்று ஒருமணி நேரத்திற்கு முன்புதான் எனக்குத் திட்டமான சமாசாரம் எட்டியது. ஆயினும் அக்குற்றம் நடந்த தென்பதைப் பற்றி மட்டும் இவர் சரியான சாட்சியம் கூறலாகும். ஆதலின் இவரை நீதியின் பட்சத்தில் ஒரு சாட்சியாக வைத்துக்கொள்ளக் கோருகிறேன்'' என்றான். நியாயாதிபதி காரியதரிசி மேல் யாராவது குற்றம் கூறுகிறீர்களா வென்று கேட்டு, ஒருவரும் அப்படிச் செய்ய முன்வராததால் காரியதரிசியை யுடனே விடுதலை செய்துவிடும்படி கட்டளையிட்டு விட்டார்.

இச்சமயம் மற்ற குற்றவாளிகள் மூவரும் ஒருவிதக் குறிப்பாய் ஒருவர் முகத்தை யொருவர் நோக்கிக் கொண்டார்கள்.

நியாயாதிபதி துஷ்டகேதுவை நோக்கி, "பிரபுவே, தாங்கள் இவர்கள் மேல் குற்றம் சாட்டுவதற்குக் காரணம் கூறுகிறீர்களா?" என்றார்.

துஷ்டகேது,

"பிரபுவே, இறந்து போன அமரநாதம் இராஜ குமாரரும் அவர் மனைவியாகிய இராணியும் பரஸ்பர அன்பின்றி வாழ்ந்து வந்தார்களென்பது யாவரு மறிந்ததே. அதைப்பற்றி நாடெங்கும் பெரிய அகௌரவமான வதந்தியாக விருந்த தென்பதும் யாவருமறிந்ததே. இச்சந்தர்ப்பத்தில் இராணியின் பெயரை அதிகமாய் நான் கூறவேண்டிய அவசிய மில்லை. இப்போது இராணியின் மேல் ஒருவரும் குற்றம் சாட்டவில்லை. அதைப் பற்றிய எல்லா விஷயமும் ஜகத்குரு அவர்களே கவனித்துக் கொள்வார்கள். இப்போது இங்கு கொண்டுவந் திருக்கப் பட்ட மூன்று குற்றவாளிகளையும் ஓடிப்போயிருக்கும் டாக்டர் தங்கவேலுப் பிள்ளையையும் பற்றி மட்டுமே நாம் கவனிக்க வேண்டியது. இராணியும் அமரநாதம் அரசரும் ஒரே அரண்மனையில் வசித்து வந்தாலும் ஒருவருக்கொருவர் பரஸ்பர ஒற்றுமையாவது அன்பாவது இல்லாதவர்களாகவே யிருந்தார்கள். ஜகத்குரு அவர்கள் அமரநாதம் இராஜகுமாரருக்கு இந் நாட்டிற்கரசராக முடிசூட்டி யிருப்பதால் அவரைப் பற்றி பிரஸ்தாபிக்கும் போது அரசரென்றே கூறவேண்டும் என்பதே நியாயமாக விருக்கிறது. இராணியும் அமரநாதம் அரசரும் வெவ்வேறு அறைகளில் போசனம் முதல் யாவும் வெவ்வேறாக வைத்துக் கொண்டே வசித்து வந்தார்கள். அப்படி யிருக்க, ஒருநாள் இராணியின் அறையில் அவருக்கு விருந்து வைக்கப்பட்டது. விருந்து நடந்து கொண்டே யிருக்கையில் திடீலென்று அரசருக்கு அப்போது நகரில்

பரவியிருந்த கொள்ளை நோய் வந்து விட்டதென்றும் அவர் சாளரத்தின் வழியாய்ப் பாய்ந்து தோட்டத்தில் குதித்து விட்டதால் இறந்து போனாரென்றும் கூறப்பட்டது. அந்த விருந்தில் இக்குற்றவாளிகளும் டாக்டர் தங்கவேலுப் பிள்ளையுமே யிருந்தவர்கள். ஆகையால் அமரநாதம் அரசர் அவ்வாறு விழுந்து மடியவில்லையென்றும் குரூரமாகக் கொலை செய்யப்பட்ட பின் தோட்டத்தில் எறியப்பட்டாரென்றும் நான் கூறுகிறேன். இதைத் தக்க சாட்சிகளைக்கொண்டு நிரூபிக்கிறேன்'' என்றான்.

அதன் பின் துஷ்டகேது அழைத்து வந்திருந்த சாட்சிகளில் அரண்மனை வேலைக்காரர்களில் ஒருவனாகிய சுப்புரங்கன் என்பவன் முதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டான். அவன் கீழ்க்கண்டவாறு கூறினான் :—

"நான் அரண்மனையில் வேலை செய்பவன். ஒரு நாள் இரவு இராணியின் அறையில் ஒரு விருந்து நடந்தது. அச்சமயம் அங்கு இராணியின் கணவரான அமரநாதம் இராஜகுமாரரும் இதோ இங்கிருக்கும் குற்றவாளிகளும், டாக்டர் தங்கவேலுப் பிள்ளையும் இருந்தார்கள். நான் ஆகாரங்களை யெடுத்துக்கொண்டு போய் வட்டித்த போது இவர்களைக் கண்டேன். பிறகு யாவரும் விருந்துண்டபின் திடீலென்று ஒருவித சந்தடி யுண்டானதைக்கேட்டு, நானும் வேலைக்காரரில் சிலர் அந்த அறையை நோக்கி யோடினோம். அதற்குள் டாக்டர் தங்கவேலுப் பிள்ளை வாயிற் படிக்கு வெளியில் வந்து கதவை மூடிக்கொண்டு "அமரநாதம் இராஜகுமாரருக்குக் கொள்ளை நோய் வந்திருக்கிறது. நீங்களெல்லாம் உங்களிடத்திற்குப் போய் விடுங்கள். அது தொத்து நோய். நோயாளியை நாங்கள் பார்த்துக் கொள்வோம்" என்றார். நாங்கள் அவ்வாறே விசனத்தோடு திரும்பிச் சென்றோம்.

பிறகு ஏழெட்டு நிமிடங்கள் கழிந்தபின் டாக்டரே ஓடி வந்து "இராஜகுமாரர் சாளர வழியாய் விழுந்துவிட்டார். ஓடிவாருங்கள் ஓடிவாருங்கள்'' என்று எங்களை யழைத்துக்கொண்டு போனர். நாங்கள் தோட்டத்திற்குச் சென்று பார்த்தபோது சாளரத்திற்கு நேராய் இராஜகுமாரரின் சவம் விழுந்து கிடந்தது'' என்றான்.

பிறகு குறுக்கு விசாரணையில் அவன் "தோட்டத்தில் பார்த்தபோது இராஜகுமாரருக்குக் கொஞ்சம் கூட உயிரில்லை. கண்கள் பிதுங்கி நாக்கு வெளியில் வந்திருந்தது. நான் முன்பு போஜன பண்டங்கள் எடுத்துக்கொண்டு வட்டிக்கச் சென்ற போது அங்கிருந்த ஒரு சோபாவின் மேல் பட்டினுலும் சரிகையாலும் திரிக்கப்பட்ட ஒரு கயிற்றுச்சுருணை யிருந்தது. அது அழகாயிருந்ததால் நான் அதையுற்றுப் பார்த்தேன்.'' என்றான்.

இரண்டாவது சாட்சி பூபாலன். அவன் இராஜாங்கக் கொலையாளியின் குமாரனென்று யாவருமறிவார்களாதலால் அவனைக்கண்டதே அனைவர்க்கும் ஒருவித வெறுப்பு தோன்றியது. குற்றவாளிகளுக்குப் பீதியுண்டாயிற்று, புண்ணியகோடிப் பிரபு மட்டும் என்ன வந்தாலும் வரட்டும் என்று ஒருவிதத் துணிகரம் உடையவன் போல் காணப்பட்டான். பூபாலன் சாட்சிக் கூண்டில் நிறுத்தப் பட்டதும் பின் வருமாறு பகன்றான் :—

"நான் கொஞ்சகாலமாகக் கொள்ளைத் தலைவனுகிய மாயசிங்கனுடைய கையாளாக விருந்தேன். நான் பன்முறை அவரோடு கூட அரண்மனைக்குட் சென்றிருக்கிறேன். அரண்மனையிலுள்ள இரகசிய வழிகளனைத்தும் எங்களுக்கு நன்ருய்த் தெரியும். அங்கிருக்கும் சிலருடைய நடக்கைகளைக் கவனிப்பதற்காக அவர் கட்டளைப் படி நான் அநேக முறை அரண்மனைக்குள் சென்றதுண்டு.

இராணியின் அறையில் விருந்து நடந்த மறுநாள் நான் அரண்மனைக்குச் சென்று பத்மநாயகிச் சீமாட்டியின் அறையிலுள்ள ஒரு இரகசியக் கதவின் பின் நின்றிருந்தேன். அது வரையில் அமரநாதம் இராஜ குமாரர் கொல்லப்பட்ட சங்கதி எனக்குத் தெரியாது. அங்கு நான் நின்றுகொண் டிருந்தபோது அந்த அறைக்குள் பத்மநாயகிச் சீமாட்டி, சித்ராங்கி, புண்ணியகோடிப் பிரபு, டாக்டர் தங்கவேலுப் பிள்ளை, இவர்கள் நால்வரும் இருந்தார்கள். அப்போது அவர்கள் அமரநாதம் இராஜ குமாரரின் மரணத்தைப் பற்றி பேசிக்கொண் டிருந்தார்கள். டாக்டர் "ஆ! நாம் இருவரும் சட்டென்று கயிற்றைப் பிடித்திழுக்கா விட்டால் புண்ணிய கோடிப் பிரபு அமரநாதனிடம் சிக்கிக் கஷ்டப்பட் டிருப்பார்" என்றார். சித்ராங்கி "நீங்கள் உடனே அப்படிச் செய்திரா விட்டால் நான் என் காதலன் உதவிக்குச் சென்றேயிருப்பேன். அவர் முதலில் போய் சரியான சமயத்தில் ஆளையமுத்திப் பிடித்துக்கொண் டிராவிட்டால் காரியம் அவ்வளவு சுலபமாய் முடிந்திராது" என்றாள். டாக்டர் "அப்படியல்ல, நமது புண்ணியகோடிப் பிரபு அவசரப்பட்டு பிடித்துக் கொண்டிரா விட்டால் இராஜகுமாரன் சுபாவமாகவே மூர்ச்சை யடைந்துவிட் டிருப்பான். அப்போது சுலபமாய் காரியத்தை முடித்து விடலாம் என்றே நான் கருதியது. இவர் பிடித்துக் கொண்டபோது அவன் சங்கதியை யறிந்து கொண்டான். உடனே அவன் சுவாசத்தை யொடுக்கிவிட் டிராவிட்டால் அவன் கூச்சலிட்டுச் சங்கதியை வெளியிட்டுவிட் டிருப்பான்" என்றார். சித்திராங்கி நகைத்துக் கொண்டே "அவன் பட்டுச்சரிகைக் கயிற்றால் சுருக்கு போடப்பட்டதே தன் அந்தஸ்திற்குத் தக்ககௌரவமாகக் கருதிக்கொண்டிருக்க

வேண்டும்.'' என்றாள். டாக்டர் உடனே "ஆ!. அந்தக் கயிறு எங்கே?'' என்றார். பத்மநாயகிச்சீமாட்டி "அது இராணியின் அறையில் அவள் மஞ்சத்தின்கீழ் வைக்கப் பட்டிருக்கிறது'' என்றாள். டாக்டர் உடனே அதை யெடுத்துவா. அது அழித்து விடப்பட வேண்டும்'' என் றார். பத்மநாயகிச் சீமாட்டி யுடனே அதை யெடுத்துவாச் சென்றார்கள். மாயசிங்கன் எனக்குக் கூறியிருக்கிற சில கட்டளைகளின்படி நான் துரிதமாக இரகசியவழியாய் இராணியின் அறைக்குச் சென்றேன். அச்சமயம் இராணி யங்கில்லை உடனே பத்மநாயகிச் சீமாட்டி கூறிய விடத் தில் இருந்த அக்கயிற்றை யெடுத்துக் கொண்டுபோய் மாயசிங்கனிடம் அளித்து விட்டேன்'' என்றான். அதன் பிறகு காரியதரிசியாகிய விக்ரமநாதம்பிரபு மூன்றாவது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் சாட்சிக்கூண்டில் நிறுத்தப்பட்டதே நியாயாதிபதியை நோக்கி,

"பிரபுவே! ஒருவன் உண்மையான சாக்ஷியத்தைக் கூறினும், சில குற்றங்கள் நடந்ததாக அறிந்திருந்தும் துரைத்தனத்தாருக்கு வெளியிடா விட்டால் அதுவும் குற்றமே யென்று சட்டம்கூறுகிறது. அதேசட்டம், நியா யாதிபதிக்கு யுக்தம் என்று தோன்றின் அக்குற்றத்தை மன்னித்து விடலாம் என்றுகூறுகிறது. ஆகையால் அதன் படி அடியேனை மன்னித்து விடுவதாய் வாக்களிக்கப் பிரார்த்திக்கிறேன். அதன்மேல் நான் அறிந்த விஷயத் தைக் கூறிவிடுகிறேன்'' என்றார். நியாயாதிபதி அவ் வாறே வாக்களித்த பின் காரியதரிசி பின் வருமாறு மொழிந்தார்:—"

"பிரபுவே! என்தொழிலின் சுபாவத்தால் நான் அடிக்கடி இராணியிடம் செல்லவேண்டி யிருப்பதால் இரா ணியின் நண்பர்களாகிய இக்குற்றவாளிகளையும் டாக்டர்

186443

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது.

கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் இவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர்; பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சகல புத்திமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 1—12—0

இரத்தினபுரி இரகசியம்.

ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம்வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றனவென்று கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதராஸ்

“ஆனந்தபோதினி”

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915௵ ஜூலை௴ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அநுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-௱-௱-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ...	4	0	தினகரசுந்தரி	1	0
பவளத்தீவு 1-ம் பாகம் ...	1	6	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	பத்மாஸனி ...	0	14
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2-பாகமும் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
சுவர்ணாம்பாள் ...	0	12	கமலசேகரன் ...	1	12
ஆனந்தஸிங் ...	2	0	பூங்கோதை ...	0	10
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடைய சரித்திர உபதேசங்கள்	1	12	அமராவதி 2 பாகமும்	4	0
			சகோதரவாஞ்சை	0	6
			ஹை ஸ்கூல் பதிப்பு ...	0	7

விலாசம்: மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச் மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.